விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 04 வெள்ளிக்கிழமை (17.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 029

# போர்க்குற்ற சாட்சியங்களை இலங்கையுடன் பகிர முடியாது!

## கோத்தாவின் கோரிக்கையை நிராகரித்தது அமெரிக்கா

(கொழும்பு)

**இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக அமெரிக்கா திரட்டிய சாட்சியங்களைத் தம்முடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜ பக்ஷ விடுத்த கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.**



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கவனிக்கும் சிறப்பு தூதுவர் ஸரீபன் ஜே ராப் திரட்டிய தக வல்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளப் போவதில்லை என்று அமெரிக்கத் தூதரக பேச்சாளர் யூலியானா ஏ ஸ்ப வன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், நாடு முழுவதிலும் உள்ள பலதரப் பட்டவர்களுடனும், அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் பரநதுபட் டளவில் தொடர்ச்சியான சந்திப்புகளை மேற் கொள்கி ன்றனர்.

19-ம் பக்கம் பார்க்க

## சர்ச்சைக்குள்ளான பரீட்சை வழமை போன்றே நடத்தப்படும்

(கொழும்பு)

அண்மைக்காலமாக பாரிய சர்ச்சைகளை எதிர் நோக்கிய ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் எந்தவித மான மாற்றங்களும் இன்றி வழமை போன்றே இந்த ஆண்டும் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஏனைய வருடங்களில் வழமையாக வழங்கப்பட்டு வந்த 2 வினாத்தாள்கள் போன்றே இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள பரீட்சையின் போதும் வழங்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை சரளமான முறையில் நடத்துவது தொடர் பில் தற்போது கல்வி ஆணைக் குழு, கல்விய மைச்சு, பரீட்சை

19-ம் பக்கம் பார்க்க

## மகிந்த, விக்கி பங்கேற்கும் முதலாவது பொது நிகழ்வு

### நாளை மறுதினம் தெல்லிப்பழையில்


(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் ஒன்றாக வடக்கில் பங்குபற் றும் முதலாவது பொது நிகழ்வு நாளை மறுதினம் 19ஆம் திகதி தெல்லிப்பழையில் இடம்பெறவுள்ளது.

300 மில்லியன் ரூபாய் செலவில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட புற்றுநோய் வைத் தியசாலை நாளை மறுதினம் காலை10.30மணி யளவில் ஜனாதி

20-ம் பக்கம் பார்க்க

## ராஜீவை தாக்கிய நபர் ஜனாதிபதியுடன் கைகோப்பு



(கொழும்பு)

முன்னாள் இந்தியப் பிரத மர ராஜீவ் காந்தியை துப்பாக்கி யால் தாக்கிய கடற் படை வீரர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையி லான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந் துள்ளார்.

1987-ம் ஆண்டு இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை அதிபர் ஜெயவர்த்தனவும் கையெழுத் திட்டனர்.

அதன் பிறகு ராஜீவ் காந்திக்கு இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அப்போது 22 வயது படை வீரர் திடீர் என்று

19-ம் பக்கம் பார்க்க

## போர் முடிந்த பின்னரும் கூட ஆண்டான் - அடிமை தொடர்கிறது

### அவதானித்து வருகிறேன் என்கிறார் சி.வி

(யாழ்ப்பாணம்)

போர் முடிந்த பின்னரும் கூட மறுபடியும் ஒரு ஆண் டான் - அடிமை உறவு முறை தொடர்ந்து வந்துள்ளதை தான் இந்த மூன்று மாதங்களுள் அவ தானித்துள்ளதாக வடமா காண சபை முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச் சர் சி.வி விக்னேஸ்வரன் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் தனது புதிய அலுவலகத்தில் தமது கட மைகளை நேற்றுக்காலை உத்தியோகபூர்வமாக ஆரம் பித்தார். யாழ் சோமசுந்தரம் வீதியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள முதலமைச்சருக் கான அலுவலகம் நேற்று காலை முதலமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து புதிய அலுவலகத் தில் வடக்கு மாகாண சபையின் அமைச்சர் உள்ளிட்ட அமைச் சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் அரச உயர் அதிகாரிகளையும் ஒரே நேரத்தில் முதற்தடவை யாக மாகாண முதலமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார் இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க்காலத்தின் போது பல வருடகாலம் உங்கள் கட மைகளில் ஒருவித தேக்கம் காணப்பட்டு வந்தது. ஆகவே போதிய அறிவை, அனுப வத்தை நீங்கள் யாவரும் உங்கள் கடமைகளில் பெற்றி ருப்பீர்கள் என்று எவரும் எதிர் பார்க்க முடியாது.

நீங்கள் ஒன்றை மட்டும் முக்கியமாகக் கருத்துக்கு எடுக்கவேண்டும் நாங்கள் மக்கள்

19-ம் பக்கம் பார்க்க

தமிழ் அகதிகளுக்காக லண்டனில் போராட்டம்
செய்திகள் பக்கம் 10


ஜனாதிபதி தேர்தலில் முடிந்தால் வெல்லுங்கள்
செய்திகள் பக்கம் 11


ஆஸி ஓபன் டெனிஸ் மரியா வெற்றி
விளையாட்டு பக்கம் 18


உரிமை கிடைக்கும் வரை அறவழியில் போராடுவோம்
செய்திகள் பக்கம் 04

3 ரொக்கெட்டுக்களை விண்ணில் ஏவியது நாசா

உலகம் பக்கம் 07

எல்லாம் வல்ல பரம பிதாவே ! இவருக்கு பாவ மன்னிப்பு அளித்தருளும்
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

## தோண்ட தோண்ட வெளிப்படும் அதிர்ச்சி

# மன்னார் மனித புதைகுழியில் நேற்றும் 4 எலும்புக்கூடுகள் மீட்பு





(மன்னார்)

மன்னார், திருக்கேதீஸ் வரம் பகுதியில் உள்ள மனித புதைகுழி 7-வது தடவையாக மன்னார் நீதிவான் முன்னி லையில் நேற்று வியாழக் கிழமை தோண்டப்பட்ட போது மேலும் 4 மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன.

இதனை அநுராதபுர சட்ட வைத்திய நிபுணர்டிஎல்வைத் தியரெட்ண உறுதிப்படுத்தி யுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 20-ம் திகதி முதல் கடந்த 7-ம் திகதி வரை 6 தடவைகள் மன்னார் நீதிவான் முன்னிலையில் குறித்த மனித புதைகுழி தோண்டப்பட்டபோது 32 மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் பல முழுமை யாகவும், சில மனித எலும்புக் கூடுகள் துண்டு துண்டுகளாக வும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த நிலையில் நீதிவானின உத்தரவிற்கமைவாக மீண் டும் நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் மற்றும் அனுரா தபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண ஆகி யோர் முன்னிலையில் 7-வது தடவையாக மனித புதைகுழி தோண்டப்பட்டது. இதன்போது [illegible]

20-ம் பக்கம் பார்க்க

## முதலமைச்சருக்கான அலுவலகம் நேற்று திறப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் புதிய அலுவல கத்தில் தமது கடமைகளை நேற்றுக்காலை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்தார்.


யாழ்.சோமசுந்தரம் வீதி யில் புதிதாக அமைக்கப்பட் டுள்ள முதலமைச்சருக்கான அலுவலகம் நேற்றுக் காலை முதலமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து புதிய அலுவலகத்தில் வடக்கு மாகாண சபையின் அமைச் சர் உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள்மற்றும்திணைக் களத் தலைவர்கள் அரச உயர் அதிகாரிகளையும் ஒரே நேரத்தில் முதற் தடவையாக மாகாண முதலமைச்சர் சந் தித்துக்கலந்துரை யாடினார். இதில்

19-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# வெங்கடேச ஐயர் காலமானார்



(யாழ்ப்பாணம்)

வாக்கியப் பஞ்சாங்கக் கணிதர் கொக்குவில் இரத்தினசபாபதி ஐயர் வெங்கடேச ஐயர் நேற்று முன்தினம் இறையடி சேர்ந்தார்.

சோதிட பரிபால மடத்தின் ஸ்தாபகர் பரம்பரையில் பிறந்த வெங்கடேச ஐயர் வாக்கியப் பஞ்சாங்கத்தை வெளியிட்டு தமிழ் மக்களின் சமயம் மற்றும் வாழ்வியல் சடங்குகளை நெறிபிறழாது நடத்துவதற்குப் பெருந் துணையாற்றியவர். அவரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றது. (ந)

# ஞாயிறு தினங்களில் மக்கள் வங்கி திறப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யா/ஸ்ரான்லி வீதிக் கிளையானது நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு தினங்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரைக்கும் வாடிக்கையாளர்களுக்காக திறக்கப்பட்டிருக்கும் என மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (செ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மு/விசுவநாதர் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என அதிபர் பி.சற்குணசீலன் அறிவித்துள்ளார். (அ-2)


விசேட இறுதி கருத்தரங்குகள்

SLEAS (Open)
சனி, ஞாயிறு 9.00 - 3.00 மணி
திறந்த பல்கலைக்கழக சட்டமாணி தெரிவு
சனி, ஞாயிறு 1.00 - 4.30 மணி வரை
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ் நகர்



(4948)

0754164564


# கூட்டமைப்பிற்கு மாறாக எந்த அமைப்பையும் ஆரம்பிக்கும் எண்ணம் என்னிடம் இல்லை

## த.வி.கூ. தலைவர் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எனக்கும் அவ் அமைப்பிற்கு எதிரான புதிய அமைப்பு எதனையும் உருவாக்கும் நோக்கம் இல்லை என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அத்தோடு த.தே.கூட்டமைப்பினர் சிறப்பாக செயற்பட வேண்டும் என்பதே தனது விரும்பம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

சில அரசியல் குழுக்களுடன் யாழ்நகரில் உள்ள யூரோவில் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடந்ததாகக் கூறப்படும் நிகழ்வு உண்மையானதே. ஆனால் அதன் நோக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாறான ஓர் அமைப்பை உருவாக்குவதல்ல. மிகக் குழப்பமான நிலையில் உள்ள யாழ்ப்பாணக்கள நிலைபற்றிக் கலந்துரையாடும் நோக்கில் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன உட்படப் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களின் கூட்டமாகும்.

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, சிறி ரெலோவைச் சேர்ந்த உதயராசா, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நான் ஆகிய மூவரும், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் ஐச் சேர்ந்த சிறிதரனுடன் இணைந்து ஒரு மாற்று அணியை உருவாக்க எண்ணுகின்றோம் என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் மக்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. உண்மையில் சிறிதரன் என்பவர்தான் அழைப்பை விடுத்தவராகும். இவர் என்னுடன் நீண்ட



காலமாக த.தே.கூ வில் இணைந்து செயற்பட்டவராவார். ஏற்கெனவே கூறப்பட்ட தலைவர்களும் பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்கள், புத்திஜீவிகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தின் கள நிலையைப் பற்றியே இங்கு பேசப்பட்டது. வட மாகாண சபையின் அதிகாரங்கள், பிரதேச சபையின் செயற்பாடுகள், சில பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டமை போன்ற பல விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன.

இச் செயலமர்வில் நல்லாட்சிக்கு வழிவகுக்கக்கூடிய ஆக்கபூர்வமான கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டன. இச் சபைகளை நடத்துவோருக்கு இக்கண்டனங்கள் மிகப் பிரயோசனமாக இருந்தன.

இக் கூட்டம் கூடியோருக்கு நல்லெண்ணம் இருந்ததேயன்றி தீய நோக்கம் ஏதும் இருக்கவில்லை. துரதிர்ஷ்டவசமாக அச்சு, மின் ஊடகங்களில் ஒரு பகுதியினர் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் என் செயற்பாடுகள் எத்தகைய நன்மை பயக்கக்கூடியவையாக இருந்தாலும் பாராட்டி ஒருவார்த்தை கூடப் பேசாமல் எதிலும் குற்றம் குறை கண்டு கொள்வதையே வழக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர். என்னுடைய நற்செயல்களை எல்லாம் இருட்டிப்புச் செய்வதே இவர்களின் தொழிலாகி விட்டதை நான் வருத்தத்துடன் கூறவிரும்புகின்றேன்.

இந்தக்கூட்டம் புதிய அமைப்பை உருவாக்குவதற்கன்றி பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்து வப்படுத்தும் கல்விமான்கள், அனுபவம் மிக்கவர்கள் போன்றோரின் கருத்துக்களைப் பரிமாறும் நோக்குடையதேயாகும். எந்த விடயத்திலும் நான் நேர்வழியை நாடுபவனே அன்றிக் குறுக்குவழிகளை எதிலும் கடைப் பிடிப்பவனல்ல மூன்றரை ஆண்டுகளாக எத்தனை திட்டமிட்ட புறக்கணிப்பு கழுத்தறுப்புக்களை எல்லாம் பொறுத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைத் தொடர்ந்து கட்டிக்காத்தே வருகிறேன். ஆனால் அங்குள்ளவர்களிலும் பார்க்க என்னிடம் எதுவும் இல்லாது போனாலும் என்னிடம் நாட்டுப் பற்று இனப்பற்று விசுவாசம் அத்தனையும் நிறைய உண்டு.

இன முரண்பாட்டுக்கான தீர்வுகாணும் விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரம் ஏகபோக உரிமையானது அல்ல. அதில் அக்கறையுடைய எவரும் பங்களிப்பை நேர்மையாகச் செய்வதில் தவறில்லை.

எது எப்படி இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாறாக எந்த அமைப்பையும் உருவாக்கும் எண்ணம் எனக்கு இல்லை. தொடர்ந்து நான் த.தே.கூ விலேயே இருந்து செயற்படுகிறேன் என ஆனந்தசங்கரி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ)

# பிரான்ஸில் கைதான புலி உறுப்பினரை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை

(கொழும்பு)

பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரை இலங்கைக்கு கொண்டுவர சர்வதேச பொலிஸாரினூடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பிரான்ஸில் கைதுசெய்யப்பட்ட முகுந்தன் எனப்படும் தர்மலிங்கம் ஜயந்தன் எனப்படும் நபர் விடுதலை புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியொருவர் என குறிப்பிட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும கூறுகையில்,

பொட்டு அம்மானின் கீழ் செயற்பட்டுள்ள முகுந்தன் எனப்படும் தர்மலிங்கம் ஜயந்தன்



2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி கறுவாத்தோட்டம், ஹோட்டன் சுற்றுவட்டம் அருகில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல், கொழும்பை அண்டிய பிரதேசங்களில் நடத்தப்பட்ட பஸ் வண்டி குண்டுத்தாக்குதல்களுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கிறார். அந்த குண்டுவெடிப்பு சம்பவங்களை அவரே தயார்படுத்தியதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

எவ்வாறாயினும் பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள குறித்த நபர், சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் இலங்கைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் பொலிஸ் திணைக்களம் ஈடுபட்டுள்ளதாகவும் அஜித் ரோஹண மேலும் குறிப்பிட்டார். (செ-11)

# ஜனாதிபதி மகிந்தவின் உருவப்படம் இனந்தெரியாதோரால் எரிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்ட பதாகையில் பொறிக்கப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட நான்கு பேரின் உருவப்படம் யாழ்ப்பாணத்தில் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் அமைந்துள்ள வீதியின் ஓரமாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டிருந்த மேற்படி பதாகையே நேற்று முன்தினம் இரவு இனம்தெரியாத நபர்களினால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது எனவும் இந்தச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ , பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் உருவம் மேற்படி பதாகையில் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)


விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815/0215671582
valampurii@yahoo.com


# மரண அறிவித்தல்



## பொன்னையா குணரத்தினம்

(ஓய்வுபெற்ற யாழ் பிரதான தபாலக ஊழியர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா குணரத்தினம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.அன்னாரின் நல்லடக்க ஆராதனை 17-01-2014 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பரி.யோவான் சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4955)

57/34 திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கடவுளும் மனிதனும்

ஜே.கிருஷ்ணமூர்த்தி என்பவர் மிகப்பெரிய தத்துவஞானி.

அவர் கூறியதாவது,

"மனித இனத்தைக் கடவுள்கள் காப்பாற்றுவார்கள் என்று மக்கள் நம்பி வருகின்றார்கள்... ஆனாலும் போர்கள் நடைபெற்று வருகின்றன!" என்றார்.

"தேசப்பற்று, மதப்பற்று, கட்சிப்பற்று, இப்பற்று, ஜாதிப்பற்று, மொழிப்பற்று இவையனைத்தும் தான் யுத்தங்களையும் கலவரங்களையும் உருவாக்கி மனித இனத்துக்குத் தாங்கமுடியாத இழப்புக்கள், வேதனைகள், விசனங்கள், துக்கங்கள் போன்றவற்றைக் கொடுத்து வருகின்றன!" என்றார் ஜே.கே.

"போர்கள் அழிவையும் வேதனையையும் உருவாக்கி வந்திருக்கின்றனவே தவிர மனித இனத்தின் ஒரு சிறிய பிரச்சினையையும் தீர்த்தது கிடையாது!" என்றார். அவர் ஒரு கதையை அடிக்கடி சொல்வதுண்டு.

அதாவது

ஒரு சிறந்த சீடன்.

அவன் கடவுளிடம் போனானாம்.

"கடவுளே! உண்மையைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு வந்திருக்கிறேன்... அதைப்பற்றி சற்று சொல்லுங்கள்! என்றான்.

பாவம்! கடவுள் என்ன செய்வார்?

சற்று யோசிக்கிறார். பின்னர் அந்த சீடனைப்பார்த்து சொன்னாராம்,

"நண்பனே! வெயில் தாள முடியவில்லை... தயவு செய்து எங்கேயாவது போய் ஒரு குவளை தண்ணீர் கொண்டுவா!" என்றார்.

சீடன் உடனே சரி என்று சொல்லிவிட்டு போகிறான்.

வழியிலே அவன் கண்ணிலே பட்ட முதல் வீட்டுக்கதவை தட்டினான்.

கதவு திறக்கப்படுகிறது.

ஒரு அழகான பெண் கதவைத் திறக்கிறாள்.

இவன் பார்க்கிறான்.

இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்ப ஆரம்பிக்கிறார்கள்... அவ்வேளை காதல் மலர்ந்தது!

இவன் எதற்காக அங்கே வந்தானோ அந்த தண்ணீர் விடயத்தை மறந்து விடுகிறான்!

இரண்டு பேரும் கல்யாணம் செய்துகொள்கிறார்கள்.

காலங்கள் கடந்தன...

குழந்தை குட்டிகளோடு அவன் குடும்பம் நடத்த ஆரம்பித்து விட்டான்.

அப்படி இருக்கிற காலத்தில்...

ஒரு நாள்... அடை மழை பெய்ய ஆரம்பித்தது.

வயல் வெளி, வீடு, வாசல் எங்கேயும் தண்ணீர்... வீடுகள் எல்லாம் வெள்ளத்திலே அடித்துக் கொண்டு போக ஆரம்பித்து விட்டது.

இந்த சீடன் என்ன செய்தான் தெரியுமா? மனைவியை ஒரு கையிலே பிடித்துக் கொண்டான். தோள் மேலே குழந்தையை உட்கார வைத்துக் கொண்டான். இன்னொரு கையிலே ஒரு குழந்தையை பிடித்துக் கொண்டான். ஏனைய குழந்தைகளையும் கூட அழைத்துக் கொண்டான்.

வீட்டை விட்டு வெளியே வந்து விட்டான்.

வழியிலே ஒரு ஆற்றைக்கடக்க வேண்டியிருந்தது.

அதனுள் இறங்கினான். அவ்வளவுதான். வெள்ளம் இவனையும் மனைவி பிள்ளைகளையும் அடித்துக் கொண்டு செல்ல ஆரம்பித்தது.

அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை!

கை இரண்டையும் உயரத் தூக்கினான்...

"கடவுளே என்னைக் காப்பாற்றும்!" என்று கத்தினான். இது கடவுள் காதில் விழுந்தது... உடனே கடவுள் கேட்டார்: "அப்பனே! நான் கேட்ட ஒரு குவளைத் தண்ணீர் எங்கே?" என்றார். தத்துவஞானி ஜே.கிருஷ்ணமூர்த்தி சொன்ன ஒரு கதை இது. மனித இயல்பைப் புரிந்து கொள்வதற்காக சொல்லப்பட்ட கதை இது.

"மனிதன் சுயநலத்தின் காரணமாக மற்றவர்களை வெற்றி கொள்ள விரும்புகிறான். மனிதர்கள் அனைவரும் இப்படி செயற்பட்டு வருவதனால் ஒவ்வொரு மனிதனும் இன்னொரு மனிதனுக்கு விரோதியாக மாறிவிடுகிறான்!" என்று அவர் கூறிய ஒரு கருத்து.

ஒருவன் கடவுளிடம் கேட்டானாம்.

"கடவுளே! எங்கள் எதிர்வீட்டுக்காரன் பொருளாதார நெருக்கடி எப்போது தீரும்?! என்றார்.

ஐந்து வருடத்திலே தீரும் என்றார் கடவுள்.

"சரி... என்னோட பக்கத்து வீட்டுக்காரன் பொருளாதார நெருக்கடி எப்போது தீரும்" என்று கேட்டான்.

"அது ஒரு ஏழு வருடத்திலே தீரும்!" என்றார்.

"சரிங்க..என்னோட பொருளாதார நெருக்கடி எப்போது தீரும்?" என்று கேட்டான்.

கடவுள் இதுக்குப் பதில் சொல்லாமல் தேம்பித் தேம்பி அழுதாராம்! பின்னர் கூறினார்.

"அதைப்பார்க்க நான் உயிரோடு இருக்கமாட்டேன்!" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சாத்தான்கள் எம்மை சீரழிக்க திட்டமிட்டு செயற்படுகின்றன

## விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக எங்களில் ஏராளமானவர்கள் ஆதரவற்றவர்களாக உள்ளனர்.

எங்களை நம்பி பல்லாயிரக் கணக்கானவர்கள் போராடி மடிந்துள்ளனர்.

அவர்கள் தமது பிள்ளைகளை நாம் வாழ வைப்போம் என்ற நம்பிக்கையில்தான் அவ்வாறு போராடி மடிந்தனர்.

இவ்வாறானவர்களுக்கும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் எம்மாலான உதவிகளை நாம் செய்ய முன்வர வேண்டுமென வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா நேற்று காலை வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவன் என்பதனால் தான் தற்போது உன்னதமான இந்த நிலையை அடைந்தேன்.

அரச சேவையை நான் விரும்பவில்லை அதற்காக நான் விண்ணப்பித்ததுமில்லை. எனது தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டமையால்தான் இன்று இந்த நிலையை அடைந்தேன்.

யாழில் உள்ள இரண்டொரு பாடசாலைகளின் அதீத வளர்ச்சியினால் ஏனைய பாடசாலைகள் பாதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

இவ் வித்தியாலயம் ஒரு கல்லூரியாக இயங்கும் வகையிலான கட்டட வசதியை கொண்டுள்ள போதிலும் மிகக் குறைந்தளவான மாணவர்களைக் கொண்டிருப்பது வருத்தத்திற்குரியது.

நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக ஏராளமானவர்கள் நிராதரவாக்கப்பட்டுள்ளனர்.

எங்களை நம்பி பல்லாயிரக் கணக்கானவர்கள் போராடி மடிந்துள்ளனர்.

தமது பிள்ளைகளை இந்தச் சமூகம் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் தான் அவர்கள் மடிந்தனர்.

அவர்களின் பிள்ளைகளையும் யத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களையும் இனங்கண்டு அவர்களிற்கு நாம் உதவ வேண்டும்.

பிரபல்யமான பாடசாலைகளில் சேர்த்துவிட்டால் எமது பிள்ளைகள் உயர்ந்து விடுவார்கள் என்று நாம் எண்ணிவிடக் கூடாது.

பிள்ளைகளை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களிற்கு உண்டு.

அண்மையில் எமது இளைஞர்கள் வாள்களோடும் கொடூர ஆயுதங்களோடும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஒரு குழுவாகவும் இயங்கி வந்துள்ளனர். இது அவர்களின் தவறல்ல அவர்களை வளர்த்த பெற்றோரின் தவறாகும்.

எம்மை சீரழிப்பதற்கு பல திட்டமிட்ட சாத்தான்கள் இங்கு உள்ளன என் பதை அனைவரும் உணர வேண்டும்.

வடக்கில் தற்போது யாரும் யாருக்கும் பயப்படாத வகையில் நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே அதனைப் பயன்படுத்தி நாம் அனைவரும் நற்பாதையில் பயணிப்போம் என்றார். (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 70 | 80 |
| தக்காளி | 40 | 40 | 40 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 30 | 60 |
| கரட் | 60 | 40 | 60 | 80 |
| பூசணி | 30 | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 80-100 | 180 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 110 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 80 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 20 | 60 | 40 |
| பயற்றங்காய் | 200 | 120 | 90 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 70 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 140 | 120 | 120 |
| போஞ்சி | 80 | 60 | 100 | 100 |
| கத்தரி தம்புள்ள | - | - | - | 50 |
| தீனை - 1 பிடி | 20 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 30 | 40 | 60 | 50 |
| தேங்காய் ஒன்று | 30-50 | 40-50 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 100 | 90 | 100 |

# இராசி பலன்

17.01.2014
(தை 04,வெள்ளிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
பிரதமை பிற்பகல் 12.56 மணிவரை
பூசம் பிற்பகல் 4.21 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை
தைப்பூசம்

**மேடம்** தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள்.

**இடபம்** மனோதைரியம் கூடும், நற்கீர்த்தியுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், மாமன், மைத்துனர் வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் சிறு தாமதம் ஏற்பட வாய்ப்புண்டு.

**கடகம்** சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், அம்பிகை வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சோம்பலை விலக்குவது நல்லது, தாராளமாகச் செலவுகள் செய்து மகிழ்வீர்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், சயன சுகமுண்டு.

**துலாம்** நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், அபூர்வ சந்திப்புண்டு , பயணங்கள் தித்திக்க வைக்கும், களஸ்திர நன்மையுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கும்பம்** சுவாரஸ்யமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ காவலரண்கள் அகற்றப்பட்டுள்ளன

(கரணவாய்)

கரவெட்டிப் பகுதியிலுள்ள இராணுவத்தினரின் காவலரண்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தின் போது அமைக்கப்பட்ட இராணுவக் காவலரண்கள் வருடக்கணக்காக இருந்து வந்தன.


தனியாருக்கு சொந்தமான காணிகள், வீடுகள் என்பனவற்றில் இராணுவம் அரண்களை அமைத்து நிலை கொண்டது.


இந்நிலையில் கரவெட்டி குஞ்சர் கடைப் பகுதியிலிருந்த தனியார் வீடு மற்றும் கடை ஆகியவற்றில் இராணுவ அரண்களில் இருந்து இராணுவம் வெளியேறியுள்ளது.

அத்தோடு நேற்றுமுன்தினம் வேலிகளை சுத்தம் செய்து கொடுத்துள்ளது.

அதே பிரதேசத்தில் உடுப்பிட்டி அப்பா பாடசாலைக்கு அருகாமையிலுள்ள தனியார் வீடொன்றில் நிலை கொண்டிருந்த காவலரண்களிலிருந்தும் இராணுவத்தினர் முற்றாக வெளியேறியுள்ளனர்.

ஆயினும் கரவெட்டிப் பிரதேசத்தில் எள்ளாங்குளம் பகுதியிலுள்ள காவலரணும் விக்னேஸ்வரா விநாயகர் வித்தியாலயத்தில் உள்ள காவலரணும் இதுவரை அகற்றப்படவில்லை. (அ-9-60)




# எமக்கு உரிமை கிடைக்கும் வரை அறவழியில் போராடுவோம்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இம் மண்ணில் விடுதலைக்கான பல்லாயிரக்கணக்கான வீரர்களை இந்த மண்ணிலே புதைத்துள்ள நாம் அவர்களுடைய கல்லறைகளுக்கு மேலாக நின்று அவர்களைப் பற்றி பேச முடியாதவர்களாக இந்த மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கின்றோம் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தைப்பொங்கலை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்திய இளைஞர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசில் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் தைப்பொங்கல் தினத்தன்று இடம் பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

விளையாட்டு என்பது எங்கள் வாழ்விலும் விடுதலையிலும் வீரத்திலும் அது எவ்வாறு செறிந்திருக்கின்றது என்பதை நாம் அறிவோம்.

தமிழர்கள் காலம் காலமாக பல்வேறு விதமான விழாக்கள், பண்டிகைகளை கொண்டாடினாலும் தமிழர்களின் தனித்துவமிக்க பெருமைமிகுந்த நாளாக தைத்திருநாள் விளங்குகின்றது.

இன்று நாங்கள் மிகுந்த சந்தோசத்துடன் விழாக்களை கொண்டாடுகின்றோம். இந்த விழாக்களுக்குப் பின்னால் எங்களுக்காக தங்கள் மூச்சை நிறுத்திக் கொண்டவர்களையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இவ் விளையாட்டின் வாயிலாக எமது உரிமைகளுக்கான பாதையை வளர்க்க வேண்டும். இவற்றின் பின்னால் பல காரியங்கள் இருக்கின்றது என்பதனை மறந்து விடக் கூடாது.

இந்த மண்ணினுடைய விடுதலைக்காக ஆயிரமாயிரம் வீரர்களை இந்த மண்ணிலே புதைத்திருக்கிறோம். அவர்களுடைய கல்லறைகளுக்கு மேலாக நின்று அவர்களைப் பற்றி பேச முடியாதவர்களாக்கப்பட்டுள்ள நாம் இன்று இந்த மைதானத்தில் விளையாடிக் கொண்டு இருக்கின்றோம்.

தற்போது எத்தனையோ உறவுகளுடைய 6 வயதுக் குழந்தையினுடைய எலும்புகள் தோண்டி எடுக்கப்படுகின்ற போது, எங்கள் காணிகள் பறிக்கப்படுகின்றபோது, எங்களின் கலாசாரங்கள் சிதைக்கப்படுகின்ற போது, நாங்கள் எங்கள் சொந்த இடங்களுக்குப் போக முடியாமல் அகதிகளாக வாழ்கின்ற போது கூட எங்கள் தனித்துவத்தை நாங்கள் இழக்கத் தயாரில்லை. மாறாக எமக்கான உரிமைகள் கிடைக்கும் வரை அறவழியிலான எமது அரசியல் போராட்டம் தொடரும் என்றார்.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் மற்றும் யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஜ:தவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-9-23)



திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா நேற்றையதினம் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. மாணிக்கராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# நவீன சந்தைக் கட்டடத்தொகுதியில் மரக்கறி வியாபாரம் ஆரம்பம்

(தும்பளை)

பருத்தித்துறை நகர சபையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மரக்கறி சந்தையின் வியாபார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் புதன் கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்தைக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த வருடம் பூர்த்தியடைந்து வடமாகாண முதலமைச்சர் சீ.வி விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

2 மாடிகளையும் 70 கடைகளையும் உள்ளடக்கியதாக இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இவற்றில் அநேகமான கடைகள் வர்த்தகர்களிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது சுமார் 30இற்கும் மேற்பட்ட கடைகளில் வியாபார நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன

இந்நிலையில் மேல்மாடியிலுள்ள மரக்கறி சந்தை நேற்று முன்தினம் தொடக்கம் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. (அ-9-19)

# ஆளுமைத் திறன் முகாமைத்துவப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஆளுமைத்திறன் பயிற்றுவிப்பாளரான செல்வரத்திணம் நிமால் முதன்முதலாக யாழ். நகரில் வர்த்தக ரீதியாக தனது பயிற்சிப் பட்டறையை எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிறீன் கிராஸ் ஹோட்டலில் நடத்தவுள்ளார்.

இப்பயிற்சியானது வாழ்க்கையின் முன்னிலைக்கு வரவிரும்பும் அனைவருக்கும் ஏற்ற முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு 2 ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளது.

இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் யாழ்.வைத்தியசாலை வீதியிலுள்ள கிறீன் கிராஸ் ஹோட்டல், பலாலி வீதியிலுள்ள விஸ்டா விஷன், கஸ்தூரியார் வீதியிலுள்ள சிறீராம் நகை மாளிகை, பருத்தித்துறை வீதியிலுள்ள மெடி எய்ட்ஸ் பார்மசி ஆகியவற்றில் பதிவுகளை மேற்கொள்ளலாம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் வாழ்வில் விடிவை ஏற்படுத்துங்கள்

## கண்ணீர் மல்கிய எவ்.ஜோசப்



இலங்கை அபிவிருத்திப் பாதை யில் செல் கிறது என்று கூறுகின் றனர். ஆனால் நாமோ அழிவுப்பா தையில் செல்கின்றோம் எனவே வடபகுதி மீனவர்களின் வாழ்வில் விடிவினை ஏற்படுத்துங்கள் என்று கண்ணீர் விட்டு அழு தார் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் இணையத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதிநிதி எவ். ஜோசப்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் இணையத்தின் அலுவ லகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறி கண்ணீர் விட்டு அழுதார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வட பகுதி மீனவர்களின் அவலநிலையினைக் கண்டு கடவு ளும் கண்மூடி விட்டார். எத் தனை முறை நாங்களும் அழிவுக ளைச் சந்திப்பது. எமது மீனவர்களின் நிலையினைப் பார்க்க பரிதாபமாக வுள்ளது. இந்தியா பெரிய நாடு. இலங்கையொரு சிறிய நாடு. இந்த நாட்டில் அமைதியையும் சமா தான த்தையும் நிலை நிறுத்த வேண்டும் என்று உலக நாடுகள் எல்லாம் வலி யுத்தி வருகின்றன.

ஆனால் இங்கு வாழும் கடற் றொழி லாளர்களின் குடும்ப ங்களை வறுமையின் பிடியில் சிக்க வைத்து கொண்டு இருக்கின் றனர். எமது பிள்ளை கள் பாடசாலைக்கு சென்று வருவதற்கு கூட ஒரு துவிச்சக்கர வண்டியை கூட வாங்கி கொடுக்க முடி யாத வறுமையில் உள் ளோம் என தாம் படும் பல துன்பங்களை எடுத்துக் கூறி கண்ணீர் விட்டு அழுதார். (அ-6)

# அரச ஊழியர்களுக்கு விசேட முற்பணக் கொடுப்பனவு

அரச ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா விசேட முற்பணக் கொடுப்பனவுகளை, வழங்குமாறு சகல திணைக்கள தலை வர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட் டுள்ளது.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன், இதற்கான சுற்றுநிருபம் சகல திணை க்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்ன தாக இந்தக் கொடுப்பனவுகள் யாவும் வழங் கப்படுதல் வேண்டும் என்று வலியுறுத்தப்ப ட்டுள்ளது.

வருட ஆரம்பத்தில் அரச ஊழியர்களுக்கு ஏற்படும் பிள்ளைகளின் கல்விச் செலவு மற்றும் அத்தியாவசிய செலவுகளை ஈடு செய்யும் விதத்தில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வழங்கப்படுகின்ற விசேட கொடுப் பனவானது, மாதாந்த சம்பளத்திலிருந்து தவணைக் கட்டண அடிப்படையில் மீள அறவிடப்படவுள்ளது. (அ-2)

## ஜெனீவாவில் அரசை தோற்கடிக்க

# வடக்கு அரசியல் கட்சிகள் தென்னிலங்கை அரசியல் அமைப்புக்களுடன் இணைய வேண்டும்

எமது நாட்டில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் மற்றும் உண்மையான புள்ளிவி பரங்களை சர்வதேசத்திடம் முன் வைத்து ள்ளோம் எனவே ஜெனீவா கூட்டத்தொடரின் போது அரசை தோல்வியடையச் செய்ய வேண்டுமாயின் வடக்கு தமிழ் அரசியல் கட்சிகள் தென்னிலங்கை அரசியல் அமைப்பு களுடன் இணையவேண்டும் என நவ சமசமாஜக்கட்சி தலைவர் கலாநிதி விக்கி ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்

ஆகவே ஜெனீவா மனிதவுரிமை பேர வையின் போது அரசாங்கம் நிச்சயம் தோல்வி காணும். இவ்வரசின் செயற்பாடு களை தாங்கள் சர்வதேசத்திடம் வழங்கியி ருப்பது அரசை தோல்வியடைய செய்வ தற்காகவே என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் யுத் தத்தின் போது மனித உரிமைகளை மீறியது டன் வடக்கு தமிழ் மக்கள் மற்றும் நாடளா விய ரீதியில் சிறுபான்மை இனத் தவர்கள் தொடர்பான போலி யான புள்ளி விபரத் தரவுகளை முன்வை த்துள்ளது. இந்நிலை யில் இத்தரவுகளை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. இலங்கையின் மனித உரிமைகள் செயற் பாடுகள் தொடர்பில் சர்வதேசத்துக்கு நன் றாக தெரியும்.

இறுதி யுத்தத் தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீற ல்கள் மற்றும் புள்ளி விபரங்கள் தொடர் பான ஆவணங்கள் அனைத்தையும் சர் வதேசத்திடம் வழங்





உங்களுக்குத் தேவையான காணிகள் வீடுகளை வாங்கவும் விற்கவும் முதன் முதலாக வட பகுதியில் உதயமாகின்றது.



நியல் எஸ்ரேற்
Real Estate

இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

(சி/6243)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 14 உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: HNDA / காசாளர்எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/965 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 42 ¼ செவ் 2 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Bachelor of Computer Application / Dispenser, Reading Pharmacy (அரச தொழில்)<br>தொ.இ: G/1353 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 13 ¾ உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBA, CIMA – II / UK – Work Permit<br>தொ.இ: B/966 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 66 ½ செவ் 7 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1354 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 14 ½ செவ் 2 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர் (UK)<br>தொ.இ: B/968 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 39 ¼ சூரி செவ் 12 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: G/1358 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 22 ½ செவ் 4 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த தொழில்<br>தொ.இ: B/969 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 58 செவ் 1 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1362 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலை சிற்றூழியர்கள் நேற்று 6 மணிநேரம் போராட்டம்


பருத்தித்துறையில்...


சாவகச்சேரியில்...


முல்லைத்தீவில்...


யாழ்ப்பாணத்தில்...

நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளில் பணியாற்றுகின்ற அனைத்து தர சிற்றூழியர்களும் நேற்றைய தினம் 6 மணிநேர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நிரந்தர நியமனம் உட்பட 9 கோரிக்கைகளை முன்வைத்தே சிற்றூழியர்கள் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இலங்கை ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கம் உட்பட அனைத்து சிற்றூழியர் சங்கங்களும் ஈடுப்ட்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் இலங்கை 6/2006 சுற்றறிக்கையை சரியாக செயற்படுத்திக் கொள்ளல், சகல அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கிக் கொள்ளல், 8மணித்தியாலகாலஎல்லையை மிஞ்சிய கடமைக்கு உகந்த மேலதிக நேரக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளல், சீருடைக் கொடுப்ப னவை ஒரே தடவையில் பெற்றுக் கொள் ளல், 5 நாட்களைக் கொண்ட வேலை வாரத்தை செயற்படுத்திக் கொள்ளல், வாராந்த விடுமுறை நாள் ஒழிப்பை உடனடியாக நிறுத்திக் கொள்ளல், அபாயக் கொடுப் பனவை அதிகரித்துக் கொள்ளல் , பரிசாரகர்களுக்காக ஒரு வருட பயிற்சியைப் பெற்றுக் கொள்ளல், முறையற்ற பதில் கடமை நியமனங்கள் வழங்குவதை உடனடியாகக் கைவிடச் செய்தல் ஆகிய கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருந்தன. இப் போராட் டம் நண்பகல் 12 மணி வரை நடை பெறவுள்ளது.

(அ-4-15-24- 29-267)

## ஞானக்கோட்டத்தின் தைப்பூச பெருவிழா

சாவகச்சேரி மீசாலையிலுள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தின் தைப்பூச பெருவிழா கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதன் நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை விசேட சிறப்புப் பூசைகள் நடைபெற்று காலை 10.45 மணிக்கு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

கடந்தாண்டு நடைபெற்ற பொது அறிவுப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவித்தலை டில்லி பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் ஆர்.இராஜகோபால், ஓய்வுபெற்ற இந்திய துணை ஆட்சியாளர் ஐ.இராமானுஜம், செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன், யாழ்.பல்கலைக்கழக இந்து கலாசார துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் வழங்கி கௌரவிக்கவுள்ளனர். அத்தோடு தொண்டும் வாழ்வும் எனும் தொனிப்பொருளில் சிறப்பு சொற்பொழிவும் இசைக்கச்சேரியும் நடைபெறவுள்ளது.

(அ-9-29)

## 300 மில்லியன் ரூபா செலவில் புற்றுநோய் வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

300 மில்லியன் ரூபா செலவில் தெல்லிப்பழையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புற்றுநோய் வைத்தியசாலையினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் 19 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புற்றுநோய் வைத்தியசாலையில் நேற்றுமுற்பகல்இடம் பெற்ற பத்திரிகையாளர்சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.



இந்தச் சந்திப்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கே. உமாசங்கர், Trail (பாதை)அமைப்பைச் சேர்ந்த நாதன் சிவகணநாதன்,சரிந்த உடனம் புவே, கு.குலரஞ்சன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுமார் 30 ஆயிரம் பேரின் பங்களிப்புடன் மாத்தறையிலிருந்து யாழ்.பருத்தித் துறை முனை வரை நடைபயணம் மேற்கொண்டு சேகரித்த 300 மில்லியன் ரூபா செலவில்இரண்டுமாடிகளைக்கொண்ட புற்றுநோய் வைத்தியசாலை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையின் கட்டட வேலைகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள நிலையில் நாளை மறுதினம் காலை 10.30 மணியளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

மொத்தமாக 180 படுக்கை அறைகளையும் சிறுவர் பூங்காவையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் புற்றுநோய் வைத்தியசாலையின் ஊடாக பலர் நன்மையடையவுள்ளதோடு எதிர்காலத்தில் தென்னிலங்கைக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டிய தேவையிருக்காது எனவும் தெரிவித்தனர். இதனைவிட பொழுதுபோக்கு அம்சங்களானதொலைக்காட்சிகள்மற்றும்விளையாட்டு மைதானம் என்பனவும் உள்ளதாக தெரிவித்தனர்.

(அ-6)

## அதிகாரப்பரவலாக்கல் வழங்கப்படும்வரை இராஜதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவோம்

### பொன்.செல்வராசா எம்.பி தெரிவிப்பு

இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு அபிவிருத்தி தீர்வாக அமையாது.

இனப்பிரச் சினைக்கு அபிவிருத்தி தீர்வாக அமையுமாக இருந்தால் 60 வருட சாத்வீகப் போராட்டமோ, அதன் பின்னரான எமது இளைஞர்களின் ஆயுதப் போராட்டமோ நடத்திருக்கவும்மாட்டாது. தமிழ் மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்தும் இருக்க மாட்டார்கள். பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் உடைமைகளையும் இழந்திருக்கமாட்டார்கள் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பொது அமைப்புகளுக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் வவுணத்தீவில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு, கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதைத் தவிர மக்களுக்கு என்ன வேண்டும். எமக்கு வேறு ஒன்றும் தேவையில்லை எனக் கூறுகின்றனர்.

இறைமையுள்ள நாட்டில் வாழ்கின்ற சகல மக்களையும் பாதுகாத்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியதும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதும் அந்த அரசாங்கத்தின் கடமையாகும். நாங்களும் இந்த நாட்டின் தேசிய இனம் எனக் கருத்திற் கொண்டு அபிவிருத்தி செய்துதான் ஆக வேண்டும். நாங்கள் அபிவிருத்தி வேண்டாம் எனக் கூறவில்லை. அபிவிருத்தி மூலம் இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதைத்தான் கூறுகின்றோம்.


அபிவிருத்தி தங்களது பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்பதனாலேயே தமது அபிலாஷைகள் நிறைவேறும் வரை தமிழ் மக்கள் எங்களுடன் இணைந்து போராடுவார்கள். ஆயுதம் ஏற்புடையதல்ல. இராஜதந்திர ரீதியாக போராடுவோர்கள். சாத்வீகப் போராட்டத்தினை அடுத்து ஆயுதப்போராட்டமும் முடிவுக்கு வந்த நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது.

மக்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த நடவடிக்கை இறுதிக் கட்ட நடவடிக்கை போன்று உள்ளது. போராட்டக் காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன நடக்கின்றது எனத் திரும்பிப் பார்க்காத சர்வதேச சமூகம் தற்போது எம்மைத் திரும்பிப் பார்க்க ஆரம்பித்துள்ளது. சர்வதேச சமூகம் இன்று எமக்காக உள்ளது. நிச்சயம் விடிவு கிடைக்கும்.

எமது இலக்கை அடையும் வரை நாம் போராடுவோம். அதிகாரப் பரவலாக்கல் வழங்கப்படும் வரை இராஜதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி பெறுவோம் என்றார்.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய்லாந்தில் அரசுக்கு எதிராக போராடி வரும் போராட்டக்காரர்கள் தலைநகர் பாங்கொக்கில் உள்ள விக்டரி சதுக்கம் முன்பாக டென்ட் அடித்து தங்கியுள்ளதைப் படத்தில் காணலாம்.

## வான்-லொறி மோதிய விபத்தில் 21 பேர் உயிரிழப்பு

### 20 பேர் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானில் பாடசாலை வான்-லொறி ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் 19 மாணவர்கள் உட்பட 21 பேர் சம்பவ இடத்தில் பலியாகினர். 20 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் சிந்து மாநிலத்தின் இணைப்பு வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

பாடசாலை மாணவர்களை ஏற்றிக்கொண்டு ஒரு வான் சென்று கொண்டிருந்தது.

அப்போது எதிரே சரக்கு ஏற்றிக்கொண்டு ஒரு லொறி வந்து கொண்டிருந்தது. கண்இமைக்கும் நேரத்தில் பாடசாலை வானும், லொறியும் பயங்கரமாக மோதிக் கொண்டன.

இந்த விபத்தில் பாடசாலை வான் அப்பளம் போல் நொறுங்கியது.

இடிபாடுகளில் சிக்கி 19 மாணவர்கள் உட்பட 21 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். விபத்தில் பலியான மாணவர்கள் அனைவரும் 12 வயது முதல் 16 வயதுக்குட்பட்டவர்கள் ஆவார்கள்.

இச் சம்பவத்தில் வானை செலுத்திய சாரதியும் பலியானார். மேலும் இந்த விபத்தில் பாடசாலை ஆசிரியர்கள் உட்பட 20 பேர் படுகாயம் அடைந்தனர். (2)

## பதவி விலகவோ தேர்தலை ஒத்தி வைக்கவோ முடியாது

### தாய்லாந்து பிரதமர் உறுதி

(பாங்கொக்)

**தாய்லாந்தில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை ஒத்தி வைக்க முடியாது. அத்துடன் பிரதமர் பதவியிலிருந்து விலகப் போதில்லை என அந் நாட்டுப் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.**



யிங்லக் பதவி விலக வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் போராட்டம் நடத்தி வருகின்றன. எனினும் இந்தக் கோரிக்கையை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

இவ்வார ஆரம்பத்தில் தாய்லாந்து தலைநகரை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் எவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், தாம் பதவி விலகப் போவதில்லை என பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வன்முறை நிறைந்த போராட்டங்களை மனதில் கொண்டு, தேர்தலை ஒத்திவைக்கலாம் என்று தாய்லாந்து தேர்தல் ஆணையம் அரசுக்கு யோசனை தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக ஆலோசிப்பதற்காக 37 கட்சிகளின் கூட்டத்தை பிரதமர் யிங்லக் நேற்று முன்தினம் நடத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். தேர்தலை ஒத்தி வைக்க அரசுக்கோ, தேர்தல் ஆணையத்துக்கோ அதிகாரம் இல்லை என்று தெரிவித்தார். (அ-2)

## எந்த காந்தி வந்தாலும் காங்கிரஸ் இனி தேறாது

### மேனகா காந்தி ஆவேசம்

காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளராக எந்த காந்தியை அறிவித்தாலும், காங் கிரசால் மீண்டும் ஆட்சியை பிடிக்க முடியாது என்று பாஜ எம்.பி மேனகா காந்தி கூறியுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல் வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ளது. இந்நிலையில், பாஜ கட்சி எம்.பியும், ராகுலின் சித்தியு மான மேனகா காந்தி நேற்று முன்தினம் கான்பூரில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.


அப்போது நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

'மன்னர் எதைத் தொட்டாலும் அது தங்கமாகும்' என்பது போல, ஒரு காலத்தில் காங்கிரசில் சிறந்த தலைவர்கள் இருந்தனர். இப்போது அப்படிப்பட்ட ஒருவர் கூட காங்கிரசில் இல்லை.

காங்கிரஸ் கட்சி, எந்த காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவித்தாலும் அதனால் மீண்டும் ஆட்சியை பிடிக்க முடியாது. காங்கிரசை இனி யாராலும் காப்பாற்ற முடியாது.

ஆம் ஆத்மி கட்சியினர் மக்களுக்கு நிறைய வாக்குறுதிகள் கொடுத்து ஆட்சியை பிடித்து விட்டு, இப்போது மக்களை முட்டாளாக்குகின்றனர். டில்லியில் பாஜ ஆட்சியமைத்திருந்தால் நல்ல ஆட்சியாக இருந்திருக்கும்இவ்வாறு மேனகா காந்தி கூறினார். (2)

## மூன்று ரொக்கெட்டுகளை விண்ணில் ஏவியது நாசா



அமெரிக்க இராணுவத்தின் இரகசிய பயணங்களை உள்ளடக்கிய மூன்று ரொக்கெட்டுகளை நாசா நேற்றைய தினம் விண்ணில் ஏவியது.

டெர்ரியர்-ஆனியன் என்ற இந்த ரொக்கெட்டுகளை 20 விநாடி வித்தியாசத்தில், அதிகாலை வேளை தொடர்ச்சியாக விண்ணில் செலுத்தி நாசா சாதனை படைத்துள்ளது.

நாசா அதிகாரிகளிடம் ரொக்கெட் எப்போது ஏவப்பட்டது என்ற தகவலை வெளியிட வேண்டாம் என அமெரிக்க பாதுகாப்பு துறை கூறியது குறிப்பிடத்தக்கது.

இருஅடுக்குசுழற்சிகொண்ட இந்த ரொக்கெட்டுகள் 1315 கிலோ எடை கொண்டதாகவும், 91 கிலோ எடையுள்ள பொருளை 200 கி.மீ உயரத்திற்கு சுமக்கும் சக்தியும், 363 கிலோ எடையுள்ள வெடிபொருளை 80 கி.மீ உயரத்திற்கு சுமக்கும் சக்தியும் கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது. (2)

## அமெரிக்க நீதிமன்றில் தேவயானி மனுத்தாக்கல்

தன்மீதான விசா முறைகேடு வழக்கை இரத்து செயய வேண்டும் என்று அமெரிக்க நீதி மன்றத்தில் இந்திய முன்னாள் துணைத் தூதர் தேவயானி கோப்ரகடே முறையிட்டுள்ளார்.

தனக்கு எதிராக இனி கைது பிடியாணை ஏதும் பிறப்பிக்கக் கூடாது என்றும் நாடு கடத்த உத்தரவிடக் கூடாது என்றும் அவர் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக தேவயானியின் வழக்குரைஞர் டேனியல் அர்ஷாக், நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவின் விபரம் வருமாறு,

ஐ.நா.வுக்கான இந்தியத் தூதரகத்தின் சிறப்பு ஆலோசகர் பதவியை கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலே தேவயானி வகித்து வந்தார். ஆகையால், கடந்த டிசெம்பர் 12ஆம் திகதி கைது செய்யப்படும் போதே அவருக்கு தூதரகப் பாதுகாப்பு இருந்துள்ளது.

தூதரகப் பாதுகாப்பு இருப்பவர்கள் மீது குற்ற நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது என்று அமெரிக்கச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால், தேவயானி மீது பதிவு செய் யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் செல்லுபடியாகாது.

ஆகையால், இனி தேவயானிக்கு எதிராக கைது பிடியாணையையும் நாடு கடத்த வேண்டும் என்ற உத்தரவையும் நீதிமன்றம் பிறப்பிக்கக் கூடாது.

அவர் மீது தொடரப்பட்டுள்ள விசா முறைகேடு வழக்கை இரத்து செய்ய வேண்டும். மேலும், அமெரிக்காவில் இருந்து இந்தியா செல்ல தேவயானிக்கு அமெரிக்க அரசு அனுமதியளித்துள்ளதால், பிணை வழங்க ஏற்கெனவே நீதிமன்றம் விதித்துள்ள கட்டுப்பாடுகளை இரத்து செய்ய வேண்டும்.

பிணை பெற அவர் நீதிமன்றத்தில் செலுத்தி உள்ள சுமார் 1.54 கோடி ரூபா பிணைத்தொகையை இரத்து செய்து, அவரது கடவுச் சீட்டை திருப்பி அளிக்க வேண்டும்.

இந்த மனு மீது ஜனவரி 31ஆம் திகதிக்குள் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருடர்கள்!

ஒரு நாள், மன்னர் அக்பர் ஒரு ஐயத்தை எழுப்பினார்.

"உலகத்தில் குருடர்கள் தொகை எவ்வளவு?"

இந்த வினாவுக்குச் சபையிலிருந்தவர்களுள் பெரும் பகுதியினர், உலத்தில் குருடர்களின் தொகை எவ்வளவு என்பதைத் துல்லியமாகக் கூறுவது கடினம்.

ஆனால், கண் பார்வை உள்ளவர்களைவீட கண்பார்வையற்றவர்கள் தொகை மிகமிகக் குறைவாகத்தான் இருக்கும் என்னும் கருத்தைத் தெரிவித்தனர்.

அக்பர், "பீரபால்! உம் கருத்து என்ன?" எனக கேட்டார்.

பீர்பல் எழுந்து, "மன்னர் பெருமானே ! இப்போது இங்கு சொல்லப்பட்ட கருத்தே குருட்டுத்தனமானதாகும்.

உலகத்தில் கண்பார்வையற்ற குருடுகளின் தொகைதான் மிகமிக அதிகம். குறிப்பாகச் சொல்வதானால், இந்த உலகத்தில் பெரும்பகுதியினர் குருடர்கள்தாம்" என்றார்.

"பீர்பால்! உமது கருத்து விநோதமாய் இருக்கிறதே! உம் கருத்துப்படி இந்தச் சபையில் இருப்பவர்களுள் பெரும் பகுதியினர் குருடர்கள் தாம் என்று கூறுவீர் போலிருக்கிறதே?" என்றார் அக்பர்.

"அதிலென்ன சந்தேகம்?" என்றார் பீர்பால்.

"அப்படியானால் நானும் ஒரு குருடனா?" என்றார் அக்பர்.



அதற்கு, "பொதுவாக ஒரு மனிதனை என்ன காரணத்தைக்கொண்டு குருடன் என்று கூறுகிறோம்?" என்று வினா எழுப்பினார் பீர்பால்.

"ஒரு பொருளை, அது இன்ன பொருள் தான் என்று சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடியாதவனைப் பொதுவாகக் குருடன் என்று கூறுகிறோம்" என அக்பர் மறுமொழி சொன்னார்.

"இப்போதுஒருசோதனை செய்து பார்ப்போம் " என்று கூறினார் பீர்பால். பிறகு ஒரு துணியை எடுத்து, "மன்னர் அவர்களே ! இது என்ன?" என்று கேட்டார்.

"அது ஒரு துண்டுத் துணி!" என்றார் மன்னர்.

பீர்பால், அதே துணியைத் தமது தலையில் ஒழுங்காகச் சுற்றிக் கட்டிக்கொண்டு, "இது என்ன?" என்று கேட்டார்.

"அதுஒருதலைப்பாகை!" என்றார் மன்னர்.

பீர்பால் அதே துணியைக் கழுத்தில் தொங்க விட்டுக்கொண்டு, "இப்போது இது என்ன?" என்றார்.

"அது கழுத்துக்குட்டை அல்லது சவுக்கம்" என்றார் அக்பர்.

பீர்பால், கழுத்துத துணியை எடுத்து இடுப்பில் சுற்றிக்கட்டிக் கொணடார்.

"இப்போது இது என்ன துணி" என்றார் பீர்பால்

"இப்போது அது லுங்கி அல்லது வேஷ்டி என்று கூறலாம்" என கூறினார்

பீர்பால் அக்பரை நோக்கிப் பணிவான குரலில், "மன்னர் பெருமானே! என் கையில் இருக்கும் இந்தத் துண்டுத் துணியைப் பற்றி உங்களால் ஒரே மாதிரியான கருத்தைக் கூற முடியவில்லை.

கண்களால் இதனை நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, ஒரு பொருளைப் பற்றிப்பலவிதமான கருத்துக்களைக் கூறினீர்கள். ஒரு குருடனின் நிலையும் இது தானே.

தனக்கு பார்வையில்லாத காரணத்தால், ஒரு பொருளைப் பற்றித் தெளிவான கருத்தை அவனால் கூற முடியவில்லை. இப்போது தங்கள் நிலையும் அதுவாகத்தானே இருக்கிறது ?

பார்வையுள்ளவர்கள் என்று கர்வப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்- என்னையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். கண் இருந்தும் குருடர்களாகத்தான் இருக்கிறோம்.

இந்தக்கண்ணோட்டப்படி பார்த்தால், குருடர்களைவிடக் கண் பார்வையுள்ள குருடர்களின் தொகை மிகவும் அதிகம் என்று நாம் கருதலாமல்லவா?" என்று கூறினார்.

ஆழ்ந்த சிந்தனை வளத்துடன் கூடிய, உண்மைகள் நிறைந்த பீர்பாலின் அந்தச் சொற்களைக் கேட்டு, மிகவும் பாராட்டினார்.




- 1377 - பாப்பாண்டவர் பதினோராம் கிரெகரி தனது ஆட்சியை உரோமுக்கு மாற்றினார்.
- 1524 - இத்தாலிய நாடுகாண் பயணி ஜியோவன்னிடா வெரசானோ சீனாவுக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார்.
- 1595 - பிரான்சின் நான்காம் ஹென்றி ஸ்பெயின் மீது போரை அறிவித்தான்.
- 1648 - இங்கிலாந்தின் லோங் நாடாளுமன்றம் முதலாம் சார்ல்சுடனான தொடர்புகளை துண்டித்தது. இதன்மூலம் இங்கிலாந்தின் உள்நாட்டுப் போர் இரண்டாம் கட்டத்தை அடைந்தது.
- 1773 - கப்டன் ஜேம்ஸ் குக் அண்டார்க்டிக் வட்டத்தை அடைந்த முதல் ஐரோப்பியன் ஆனான்.
- 1819 - சைமன் பொலிவார் கொலம்பியக் குடியரசை அறிவித்தார்.
- 1852 - ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் போவர் குடியேற்றங்களை அங்கீகரித்தது.
- 1893 - ஹவாயில் அமெரிக்க கடற்படையின் தலையீட்டால் அரசி லிலியோகலானியின் அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1899 - பசுபிக் பெருங்கடல் பகுதியில் வேக் தீவை ஐக்கிய அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது.
- 1917 - கன்னித் தீவுகளுக்காக ஐக்கிய அமெரிக்கா $25 மில்லியனை டென்மார்க்கிற்கு வழங்கியது.
- 1928 - லியோன் ட்ரொட்ஸ்கி மொஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் போலந்தின் வார்சா நகரைக் கைப்பற்றினர்.
- 1945 - சோவியத் படைகள் நெருங்கியதை அடுத்து அவுஷ்விட்ஸ் வதை முகாமில் இருந்து நாசிகள் வெளியேற ஆரம்பித்தனர்.
- 1946 - ஐ.நா பாதுகாப்பு அவை தனது முதலாவது கூட்டத்தை நடத்தியது.
- 1951 - சீன மற்றும் வட கொரியப் படையினர் சியோல் நகரைக் கைப்பற்றினர்.
- 1961 - கொங்கோ ஜனநாயகக் குடியரசின் பிரதமர் பாட்ரிஸ் லுமும்பா இராணுவப் புரட்சியின் பின் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1973 - பேர்டினணட் மார்க்கோஸ் பிலிப்பீன்சின் நிரந்தர ஜனாதிபதியானார்.
- 1991 - வளைகுடாப் போர் ஆரம்பித்தது.

### பிறப்புகள்

- 1706 - பெஞ்சமின் பிராங்கிளின், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர், எழுத்தாளர் (இ. 1790)
- 1911 - ஜோர்ஜ் ஸ்டிக்லர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1991)
- **1917 - எம். ஜி. இராமச்சந்திரன், தமிழ்நாட்டின் முதலமைச்சர் (இ. 1987)**
- 1977 - என். சொக்கன், தமிழக எழுத்தாளர்

### இறப்புகள்

- 1961 - பாட்ரிஸ் லுமும்பா, கொங்கோ ஜனநாயகக் குடியரசின் பிரதமர் (பி. 1925)
- 2002 - கமீலோ ஜோஸ் சேலா, நோபல் பரிசு பெற்ற ஸ்பானிய எழுத்தாளர் (பி. 1916)
- 2007 - ஆர்ட் புச்வால்ட், அமெரிக்க நகைச்சுவையாளர் (பி. 1925)
- 2009 - கமில் சுவெலபில், செக் நாட்டுத் தமிழறிஞர் (பி. 1927)
- 2010 - ஜோதிபாசு, இந்திய [illegible] நீண்ட நாள் முதல்வராக இருந்தவர் (பி.1914)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொன்மனச்செம்மல்
### எம்.ஜி.இராமச்சந்திரன்



எம்.ஜி.ஆர் என்ற பெயரில் புகழ்பெற்ற, மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் 1917 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பிறந்தார். தமிழ்த்திரைப்பட நடிகராகவும் 1977 முதல் இறக்கும் வரை தமிழ்நாட்டின் தொடர்ந்து மூன்றுமுறை முதலமைச்சராகவும் இருந்தவர்.

இவர் உயரிய விருதுகளில் ஒன்றான பாரத ரத்னா விருதினை பெற்றவர். இராமச்சந்திரன் இலங்கையின் கண்டிக்கு அருகே யுள்ள நாவலப்பிட்டியில் மருதூர் கோபால மேனனுக்கும் சத்தியபாமாவுக் கும் மகனாகப் பிறந்தார்.


நாடகத்துறையில் நன்கு அனுபவமான நிலைமையில் திரைப்படத் துறைக்குச் சென்றார். திரைப்படத்துறையில் தனது அயராத உழைப்புக் காரணமாக முன்னேறி முதன்மை நடிகரானார். இவரது நடிப்பு பெரும் எண்ணிக்கையிலான மக்களைக் கவர்ந்தது.

விடுதலைப் புலிகளுக்கும் பிரபாகரனுக்கும் வெளிப்படையான ஆதரவு அளித்தார். எம்.ஜி.ஆர்.– ஆயுதம் வாங்கி இலங்கைக்கு கொண்டு வந்து தமிழ்மக்களை காப்பாற்ற, முதலில் இரண்டு கோடி ரூபாயை த.வி.புகளுக்கு வழங்கினார். அந்த உதவி இல்லையென்றால் இந்தளவிற்கு இயக்கம் வளர்ந்திருக்க இயலாது என்று பிரபாகரன் பேட்டியில் கூறியிருக்கிறார். மேலும் எம்.ஜி.ஆரை அண்ணன் என்றே அழைத்ததாகவும் கூறியிருக்கிறார். மத்திய அரசு விடுதலைப்புலிகளுக்கு நெருக்கடி கொடுத்த காலகட்டத்திலும் பெரிய தொகையை கொடுத்து உதவி செய்தார்.

எம்.ஜி.ஆரின் மறைவிற்கு பிரபாகரன் வெளியிட்ட இரங்கல் செய்திகள் தமிழீழ மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென விரும்பிய மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றனர் என்று கூறியுள்ளார்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் நினைவாக சென்னையில் மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிடத்துக்கு அருகில் அவரது உடல் புதைக்கப்பட்டது. அந்த இடத்தில் இவரின் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எம்.ஜி.ஆரின் மார்பளவுச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆரின் அரிய புகைப்படங்களும், அவருடைய சில பொருட்களும் மக்களின் பார்வைக்கு தனி கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

# சதுரகிரி சித்தர்கள்



சதுரகிரி தெய்வம்

## ஆன்மீகம் 05

தில்லை விருட்சம் என்றொரு மரம். இதுவும் தும்புகச் செடி போலவே மானுடர் உடலில் பட்டால் முகத்தை வீங்க வைத்துவிடுமாம். அதனால் இந்த மரத்திற்கு முகம் வீங்கி மரம் என்றொரு வேறு பெயரும் உண்டாம்.

திசை மிரட்டி என்றொரு மூலிகை. சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கும் நாம் தப்பித்தவறி இந்த மூலிகையின் அருகில் சென்றுவிட்டால் நாம் செல்லும் பாதைக்கு எதிர் திசையில் நம்மைப் பயணப்பட வைத்துவிடுமாம். மிகவும் எச்சரிக்கை தேவை.

இதுமட்டுமல்ல, எத்தகைய திட சித்தம் உடையவர்களையும் மதிமயக்கம் கொள்ள வைக்கும் மதிமயக்கி என்ற மூலிகையும், நினைவை இழக்க வைக்கும் அதிசய மூலிகைகளும் இந்தச் சதுரகிரிக் காட்டில் உள்ளனவாம்.

இத்தகைய மூலிகை வளங்கள் இந்தச் சதுரகிரியில் இருப்பதைக் கேள்விப்பட்டுத்தான் அகத்திய முனிவரும் பொதிகை மலையிலிருந்து சதுரகிரிக்கு வந்ததாகத் தலபுராணம் கூறுகிறது.

இவைகள் சித்தர் காலத்தில் இருந்தவை; தற்போதும் பயன்பாட்டில் இருக்கிறதா? என்பது நமக்குத் தெரியாது. காரணம் நம்மால் இம்மூலிகைகளை இப்பொழுது அடையாளம் காண முடியாது. தவிர மூலிகை ஆராய்ச்சி செய்கிறேன் பேர் வழி என்று எதனையாவது செய்து பார்க்க சரியான பக்குவம், சரியான மூலிகை, சரியான வழிகாட்டுதல் இல்லாத நிலையில் அபாயகரமான விளைவுகளையும் நாம் சந்திக்க நேரலாம். ஆகவே மூலிகை பற்றிய ஆராய்ச்சியைத் தேர்ந்த மருத்துவர்களிடமே விட்டுவிடுவோம்.



சதுரகிரி- கோரக்கர் என்ற சித்தரின் குகை

இந்தச் சதுரகிரியில் அதிசய மூலிகைகள் மட்டும் இல்லை. அதிசய விலங்கினங்களும் இருப்பதாகத் தலபுராணம் தெரிவிக்கின்றது.

சதுரகிரி காட்டினுள்ளே சிங்கம், யாளி, புலி, கரடி, கடுவாய், யானை, பன்றி, மான், மரை, மலைப்பசு, வரையாடு, குரங்கு, காட்டெருமை முதலிய விலங்கினங்களும், மலைப்பாம்புகளும், வேறெந்தக் காடுகளிலும் காண முடியாத பறவைக் கீரி, பறவைப் பாம்பு, பறவைப்பூனை, பறவை ஓந்தி, பறக்கும் அணில் முதலான விசித்திர பிராணிகளும் அகண்ட பேரண்டமாகிய இருதலைப் பட்சிகளும், எட்டுக்கால் பறவையாகிய சரபமும், தீ விழுங்கும் பட்சியும், நிலவு அமுதைப் பருகும் சகோதர பட்சியாகிய செப்போத்து ஆகிய அபூர்வ பறவைகளும் இந்தச் சதுரகிரியில் அதிசயத்திலும் அதிசயமாகக் காணப் படுவதாகத் தலபுராணம் தெரிவிக்கின்றது.

இவைகளெல்லாம் இங்கு இருப்பது உண்மை என்பதை வனத்துறையின் தாணிப்பாறை அறிவிப்புப் பலகையும் தெரிவிக்கின்றது.

அபூர்வ இயற்கையமைப்பு, அதிசய விலங்கினங்கள், அரியவகை மூலிகைகள், வற்றாத நீரூற்றுக்கள் அத்தனையும் நிறைந்த அமைதியான வனத்தில் அதிசயங்கள் நிகழ்த்தும் சித்தர்களின் தவச்சாலைகள் மட்டும் இல்லாமல் இருக்குமா என்ன? திருமூலர், அத்திரி, அகத்தியர், போகர், சுந்தரானந்தர், யூகி, காலாங்கிநாதர், கொங்கணவர் முதலான சுமார் இருபத்தெட்டு சித்தர்களின் ஆசிரமங்களையும் குகைகளையும் கோரக்கர் சதுரகிரி வனத்தில் அடையாளம் காட்டுகின்றனர்.

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



17

என் முதுகில் ஒரு அடி கொடுத்துவிட்டுச்சென்றுவிட்டார். முதுகில் தட்டும் அந்த அடியில் உள்ளர்த்தம் எனக்கு மட்டுமே தெரியும். அன்றைய அடியின் அர்த்தம்- திருப்தி!



ஒருநாள், செம்மலின் உதவியாளர் சபாபதி மூலம் நடு இரவில் கூப்பிட்டனுப்பினார். அப்போது நானும் ராயப் பேட்டையில்தான் இருந்தேன்; போனேன்.

மூக்கைக் கசக்கிக் கொண்டு இருந்தார். மூக்கை கசக்கினால் கோபம் எனப் பொருள்.

நின்றேன்.

வழக்கம்போல் உட்காரச் சொல்லிய பின்பும் சிந்தனை ஓயவில்லை.

முன்னால் நிறைய கணக்குப் புத்தகங்கள் இருந்தன.

செம்மலை அண்ணா என்றுதான் கூப்பிடுவேன். அன்றும் என்னண்ணா ரொம்ப யோசனையிலிருக்கிறீங்க என்று கேட்டேன்.

"ஆமா ஓய், இந்தக் கணக்குலே கூட்டல் கழித்தல் வகுத்தல் பெருக்கல்னு இருக்கிற மாதிரி இன்னொண்ணும் இருக்குதே. அது தெரியுமா உமக்கு" என்றார்.

தெரியாது என்றேன்.

"அது ஒதுக்கல் அதுதான் நடந்திருக்குது.

உமக்கு எல்லாக் கதையும் தெரியுமே. இந்த பாரதக்கதை தெரியுமா?

ஒருநாள் துரோணாச்சாரியார் தர்மரையும் துரியோதனனையும் கூப்பிட்டு உலகத்திலே ஒரு கெட்டவனைத் தேடிக் கூட்டிக்கிட்டு வரும்படி தர்மனையும் ஒரு நல்லவனைக் கூட்டி வரும்படி துரியோதனனையும் அனுப்பினார்...

மறுநாள் ரெண்டு பேரும் வெறுங் கையோடு வந்து நின்னாங்களாம்.

அதே மாதிரி நான் எல்லோரையும் நல்லவராக நினைச்சதாலே என்னை நஷ்டப்படுத்தப் பாக்குறாங்க. இரண்டு ஏரியா டிஷ்டிரிபூஷன் கொடுத்தேன். 200 நாள் ஓடிய படத்துக்கும் நஷ்ட கணக்கு காட்டுறாங்க.

போகட்டும், அவுங்க மேலே கோபம் இல்லே. லாபத்தை நஷ்டமா எழுதியிருக்கிற அந்தக் கலையை ரசிக்கிறேன். அதுக்காகப் பாராட்டுகிறேன். விட்டுத்தள்ளும். உம்மை கூப்பிட்டு அனுப்பியது என் கதையைச் சொல்றதுக்கு அல்ல. புதுசா ஒரு கதை அமைக்கணும்.

நாடோடி மன்னனுக்கு எடுத்த படம் ஏராளம். இதுங்களையெல்லாம் எடுத்து ஒட்டச் சொல்லியிருக்கிறேன் எடிட்டர் உமாநாத்திடம். அதையெல்லாம் பாத்துட்டு நாடோடி மகன்னு ஒருகதை தயார் பண்றீர். இருக்கிற படத்துலே எது எதை புதுக் கதைக்கு வச்சுக்கலாம்னு பாரும்.

பத்துநாள் தான் ஷூட்டிங், மத்தது இருக்கிற படம். இப்பபோய் தூங்கும் யோசிச்சிட்டு நாளைக்கு வாரும். இப்படி, ஏதாவது செய்யலேன்னா "ராமச்சந்திரன் உண்மையிலேயே நாடோடியா போய்டுவான்" என்றார்.

இடுக்கண் வருங்கால் நகுக அந்த வள்ளுவன் சொல்லை நேரில் கண்டுவிட்டு நகர்ந்தேன்.

எதையும் தாங்கும் இதயம் தனக்கிருப்பதை நிரூபித்துவிட்டார் நெஞ்சுக்கினியநாதர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியில் உள்ள தமிழ் அகதிகளுக்காக லண்டனில் கவனயீர்ப்பு போராட்டம்

(லண்டன்)

அவுஸ்திரேலியாவில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களின் விடுதலைக்காக லண்டனிலுள்ள அவுஸ்திரேலியாவின் அலுவலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

இப் போராட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது.

அவுஸதிரேலியாவில் புகலிடம் கோரிய பல ஆயிரக்கணக்கான அகதிகளில் 46 அகதிகள் சில ஆண்டுகளாக காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 42 பேர் ஈழத் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டு அரசாங்கத்தினால் இவர்கள் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவருக்குமே இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது என்பதை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அகதிகளுக்கான அந்தஸ்து என்ற நிலையை வழங்கியிருக்கின்றது.

ஆனால் அதன்பின்னர் அவுஸ்திரேலிய புலனாய்வு அமைப்பானது இவர்களினால் அவுஸ்திரேலிய நாட்டுக்கு அல்லது இலங்கைக்கு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கருதி ஒரு மதிப்பீட்டை வழங்கியுள்ளது.

இதன்படி நிரந்தரத் தடுப்பு முகாம்களில் இவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சட்ட உதவிகளைப் பெறமுடியாதபடி இவர்களின் விடயத்தில் நீதித்துறை முடக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு ஆயிரக் கணக்கில் பல நாடுகளிலிருந்தும் அகதிகள் வரும்போது ஈழத் தமிழர்களைக் குறிவைத்து இந்த 'நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்ற கோதாவின்கீழ் நட வடிக்கை மேற்கொள்ளப்படுவது தமிழர்கள் மத்தியில் கடும் விசனத்தைத் தோற்றுவித்துள்ளது இதற்காகவே போராடடம் நடத்தப்படவுள்ளது. (அ-2)

# தேர்தலில் வாய்ப்பு வழங்க புதிய கட்டுப்பாடு அறிவிப்பு

## பவ்ரல் அமைப்பு விடுத்தது

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் நடிகர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களை வேட்பாளர்களாக போட்டியிட பெயரிட வேண்டாம் என்று இலங்கையில் தேர்தல்களை கண்காணிக்கும் அமைப்பான பவ்ரல் கோரிக்கை விடுத்துள்ளது.

இக் கோரிக்கையை அனைத்து கட்சிகளுக்கும் விடுப்பதாக பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் வாரிசுகள் என்று தேர்தல் வேட்பாளர்கள் பெயரிடப்படுகின்றனர். இது இலங்கையில் உருப்படியான அரசியல் ஒன்றுக்கு வழிவகுக்காது.

அரசியலில் ஈடுபடுவோர் மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். வெறுமனே போட்டியிட்டு வெற்றி பெறுபவராக மாத்திரம் இருக்கக்கூடாது.

கடந்த காலத்தை பார்ப்போமானால் விஜயகுமாரதுங்க மற்றும் அர்ஜுன ரணதுங்கவை தவிர வேறு எந்த ஒருவரும் இலங்கை அரசியலில் உரியமுறையில் செயற்படவில்லை.

எனவே உண்மையாக அடிப்படையாக அரசியலில் ஈடுபட்டு மக்களுக்கு சேவை செய்பவரகளை மாகாணசபை தேர்தலிலும் எதிர்வரும் ஏனைய தேர்தல்களிலும் வேட்பாளர்களாக பெயரிடுமாறு அவர் கோரியுள்ளார். (அ-2)

# உடலினுள் மறைத்து தங்கம் கடத்த முயன்ற மூவர் மடக்கிப்பிடிப்பு

சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்கு தங்கம் கடத்த முயன்ற மூவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று சந்தேக நபர்களிடமிருந்தும் 27 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளை மீட்டெடுத்துள்ளதாக சுங்க திணைக்களத்தின் சட்டப் பணிப்பாளர், லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

இவர்கள் மலவாயினுள் மிகவும் சூட்சுமமாக தங்க பிஸ்கட்டுகளை மறைத்து வைத்து கடத்திச் செல்ல முற்பட்ட நிலையிலேயே கைதானார்கள்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கொழும்பிலிருந்து மும்பாய்க்கு பயணிக்க விருந்த விமானத்தில் இருந்த இரு பயணிகள் சுங்க அதிகாரிகளினால் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

34 வயதுடைய நபரை சோதனையிட்ட அதிகாரிகள் சந்தேகநபரின் மலவாயினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான 198 கிராம் எடையுள்ள 2 தங்க பிஸ்கட்டுகளை மீட்டனர். விசாரணைக்கு பின்னர் அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, 48 வயதுடைய நபரை சோதனையிட்ட அதிகாரிகள் அவரின் மலவாயினுள் மறைத்துவைக்கப்பட்டிருந்த 7 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான 157 கிராம் எடையுடைய தங்க பிஸ்கட் ஒன்றை மீட்டனர். விசாரணைக்கு பின்னர் அவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சென்னை நோக்கிச் செல்லவிருந்த யு. எல். - 127 விமானம் மூலம் செல்ல தயாராகவிருந்த 28 வயது இளைஞரை சோதனைக்குட்படுத்திய அதிகாரிகள் இளைஞனின் மலவாயிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 தங்க பிஸ்கட்டுகளை மீட்டனர். விசாரணைக்கு பின்னர் அவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக் கப்பட்டுள்ளது. (அ-2)

# மிதக்கும் புத்தகசாலையை பார்க்க சென்ற பலர் திருப்பி அனுப்பப்பட்டனர்

## தகுந்த ஏற்பாடுகள் இன்மையே காரணமாம்

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்கும் உலகின் மிகப் பெரிய புத்தகக் கப்பலை பார்வையிடச் சென்ற ஒரு தொகுதி மாணவர்களும் பொதுமக்களும் திருப்பி அனுப்பப்பட்டதால் ஏமாற்றமடைந்தனர்.

உலகின் மிகப்பெரிய மிதக்கும் நூலகசாலை என வர்ணிக்கப்படும் குறித்த கப்பல், கடந்த 9 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நின்றுள்ளது.

இதனை பார்ப்பதற்கு பல்லாயிரகணக்கானோர் தினமும் சென்று வருகின்றனர்.


இந்நிலையில், விடுமுறை தினங்களான கடந்த 14,15 ஆம் திகதிகளில் பெருந்திரளானோர் திருகோணமலை துறைமுக சூழலில் குழுமி நின்றனர்.

இருந்த போதும், கப்பலுக்குள் நுழைந்து பார்வையிடுவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

பாதுகாப்பு காரணங்களுக்காகவே உடனடியாக கப்பலின் கதவுகள் மூடப்பட்டதாக அறிவிக் கப்பட்ட போதும், அளவுக்கதிகமான சன நெரிசலே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலை பார்வையிட வந்த மாணவர்களையும் பொதுமக்களையும் உள்வாங்கக் கூடியவாறு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படாத நிலையில், அங்கு வந்த அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டதால் கடுமையான ஏமாற்றத்திற்குள்ளாகினர்.

இதன்பின்னர் வேறு வழியின்றி அவர்கள் அனைவரும், அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களை பார்வையிட்டு சென்றுள்ளனர். (அ-2)


யாழ்.இணுவையூர் ரசிகப் பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் இசையரங்கும் சிந்தனை செய் குறும்பட வெளியீட்டு விழாவும் இடம் பெற்றபோது...
(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# சிங்கள மக்கள் வீழ்ச்சியால் சிறுபான்மை இனம் எழுச்சியாம்

## பொது பல சேனா கர்ஜிப்பு

சிங்கள மக்கள் சமூகத்தின் வீழ்ச்சியால் ஏனைய சிறுபான்மை சமூகங்கள் மேன்மையடைந்து வருவதாக பொதுபலசேனா இயக்கம் தெரிவிக்கின்றது.

இதனையே சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தும் விதமாக பொதுபல சேனா இயக்கம் நாடு முழுவதும் எடுத்துச் செல்லும் வாகன பேரணி தம்பானை பிரதேசத்தை சென்றடைந்தது.

பொதுபல சேனா இயக்கத்தினர் நேற்று ஆதிவாசித் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோவையும் சந்தித்தனர்.

இந்த வாகன பேரணியை இரண்டு வருடங்களுக்கு நாடு முழுவதும் எடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளதாக பொதுபல சேனா இயக்கத்தின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் சமூகத்தினுள் நிலவும் பிளவுகள் காரணமாக ஏனைய இனத்தவர்கள் நாளாந்தம் மேன்மையடைந்து வருவதாக தெரிவித்தார்.

இதன்காரணமாக சிங்கள மக்களுக்கு செல்வதற்கு இடமில்லாமல் போய்விட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

வடக்கு முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் போன்றவர்கள் வந்து வரலாற்றை மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள். அதற்காக ஐரோப்பா போன்ற மேலைத்தேய சமூகத்தினரின் உதவிகளை கோருகின்றார்கள்.

சிங்கள அரசியல் தலைவர்களின் செயற்திறனற்ற செயற்பாடுகள் காரணமாகவே அவர்கள் தமது அதிகாரத்தை பயன்படுத்துகிறார்கள். தந்திரமான முறையில் செயற்படுகிறார்கள். பல வீனமான அரசியல், அமைதியான போக்கு போன்றவை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார். (அ-2)

# யோகாசன வகுப்புக்கள் பெப்ரவரியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் இலவச யோகாசன தியான வகுப்புக்களின் புதிய பிரிவு எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வகுப்புக்கள் நல்லூர் ஆலயத்தின் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும்.

இதில் ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கு தனித்தனிப் பிரிவுகளாக நடத்தப்படவுள்ளதாகவும் நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறி 6 மாதங்களை உள்ளடக்கியுள்ளது. இதனை பூரணமாக முடிப்பவர்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சி நெறி தொடர்பான மேலதிக தகவல்களையும் பயிற்சி நடைபெறும் நேரங்களையும் நாவலர் மணிமண்டபத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இதன் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை அன்று காலை 7 மணிக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் திருமதி. அனந்தலட்சுமி மாணிக்கராஜசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் முடிந்தால் வெற்றியடைந்து காட்டுங்கள்

## அமைச்சர் அபே குணவர்த்தன சவால்

(கொழும்பு)

**அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது நிச்சயமாகும். இதில் மீண்டும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 25 இலட்சம் அதிகப் படியான வாக்குகளால் வெற்றி பெறுவதும் நிச்சயமாகும். முடிந்தால் எதிர்க்கட்சியினர் எவரையாவது களமிறக்கி வெற்றி பெற்றுக் காட்டட்டும் என நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன சவால் விடுத்துள்ளார்.**

இவ்வருடம் ஜூன் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும். எனவே, இவ் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப அனைத்து கட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென மங்கள சமரவீர எம்.பி தெரிவித்துள்ள கருத்து மற்றும் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரக் கணக்கெடுப்பில் உண்மைத் தன்மை இல்லையென தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் அரச தரப்பு நிலைப்பாட்டை தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தா். அவர் மேலும் தெரிவக்கையில்,

பிரிவினைவாத மற்றும் விடுதலைப் புலி பயங்கரவாத மன நிலையிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இன்றும் அரசியல் நடத்துகின்றனர்

மங்கள சமரவீர எம்.பி. சொல்லும் திகதியில் அல்ல எந்தவொரு திகதியிலும் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் நடத்த தயாராகவே உள்ளோம். ஆனால் தேர்தலை நடத்துவது எப்போது என்பதை தீர்மானிக்க வேண்டியது அரசாங்கமும் மக்களுமே ஆகும்.

எமக்கு தேவையான தினத்திலேயே தேர்தலை நடத்துவோம். ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு எமக்கு எமது கட்சியிலேயே வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருக்கின்றார்.

மக்கள் ஆதரவும் அவருக்கு உள்ளது. அந்த ஆதரவை அசைக்க முடியாது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 18 இலட்சம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார்.

இம்முறை தேர்தலில் 25இலட்சம் மேலதிகமான வாக்குகளால் வெற்றி பெறுவது நிச்சயமாகும். அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவோம்.

ஆனால் ஐ.தே.கட்சிக்கு இதில் களமிறக்க வேட்பாளர் இருக்கின்றாரா. அல்லது பொது வேட்பாளர் யாரென்பதை கூற முடியுமா? எதுவுமே கிடையாது. ஐ.தே.கட்சி, ஜே.வி.பி., சரத்பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி அனைத்து கட்சிகளும் வங்குரோத்து அடைந்துவிட்டன.

கீழே விழுந்து விட்ட இவர்களால் மீள எழமுடியாது. வேட்பாளரை தெரிவு செய்ய முடியாத எதிர்க்கட்சியினால் எப்படி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும்.

நாட்டில் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நடைபெறுகிறது. ராஜபக்ஷ றெஜிமன்ட் ஆட்சி நடக்கவில்லை. ஆனால் மங்கள எம்.பி.யின் கனவிலும் ஜனாதிபதியே வருகிறார். அதற்காக அனுதாபப்படத்தான் முடியும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பாராளுமன்ற உறுப்பினா் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.யும் இன்றும் விடுதலை புலி பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாத மனநிலையிலிருந்து மீளவில்லை.


எனவே மீண்டும் சமாதானத்தை சீர்குலைத்து பயங்கரவாதத்தை உருவாக்க புள்ளிவிபரக் கணக்கெடுப்பில் நம்பகத் தன்மை இல்லையென்ற பொய் பிரசாரத்தை முன்னெடுக்கின்றனர்.

அரசாங்க அதிகாரிகளால் அதுவும் தமிழ் அதிகாரிகளின் பிரசன்னத்துடனேயே இது மேற்கொள்ளப்பட்டது. அதனையே பொய்யெனக் கூறுவது சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்காகவே.

ஏனென்றால் இவ்வாறு பொய்யான பிரசாரத்தை மேற்கொள்வதன் மூலமே சர்வதேச நாடுகளிடம் சிறப்புரிமையை பெற முடியும்.

தமிழ் மக்கள் இன்று சுதந்திரமாக வாழ்கின்றனர். படையினர் விசாரிப்பதில்லை, தேசிய அடையாள அட்டையை பரிசோதிப்பதில்லை, நாட்டில் எங்கும் அவர்களால் வாழ முடியும், வடக்கு கிழக்கில் அபிவிருத்திகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுகிறது.

விரைவில் யாழ்ப்பாணத்துக்கான அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்படும். இதன் பிரதிபலன்களை வடபகுதி இளம் சமூகத்தினர் அனுபவிப்பார்கள். இதனால் கூட்டமைப்பின் புலி மனோநிலை அரசியல் வீழ்ச்சியடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



டென்மார்க்கிலுள்ள கைதடி மக்களின் நிதி அனுசரணையுடன் அப்பகுதியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களுடன் துவிச்சக்கர வண்டியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களும் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:-கிளிநொச்சி செய்தியாளர்)

## வெளிநாடு சென்ற மூவாயிரம் இலங்கையர்கள் முறைப்பாடு

(கொழும்பு)

தொழிலுக்காக வெளிநாடு சென்ற 3 ஆயிரம் இலங்கையர்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது. இதன் பிரகாரம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக சென்று மீண்டும் நாடு திரும்பும் நோக்கில் மூவாயிரத்திற்கும் அதிகமானவர்களிடமிருந்து முறைபாடுகள்முன்வைக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கிறது.

ஒப்பந்த காலப்பகுதிக்குள் எவருக்கும் நாடு திரும்ப முடியாது என பணியகத்தின் பிரதி பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான மங்கல ரன்தெனிய கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்பவர்களுக்கான ஒப்பந்த காலம் 2 வருடங்களாக இருப்பதுடன் இந்த காலப்பகுதியில் ஒப்பந்தத்தை மீறி மீண்டும் நாடு திரும்ப முடியாது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிடுகின்றது.

இது தொடர்பில் மக்கள் தெளிவடைய வேண்டும் என பணியகத்தின் பிரதி பொதுமுகாமையாளர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பெண்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன் இவர்களுள் மூவாயிரத்திற்கும் அதிகமானவர்கள் மீண்டும் நாடு திரும்பும் நோக்கில் கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இது தொடர்பில் தொழில் நிமிர்த்தம் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு முன்னர் தெளிவூட்டப்பட்ட போதிலும் அங்கு சென்ற பின்னர் சிலர் மீண்டும் நாட்டிற்கு வர முயற்சிப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது. (அ-2)

## ஆள் அடையாளத்தை உறுதி செய்ய வேண்டும்

### தேசப்பிரிய தெரிவிப்பு

தேர்தலில் போட்டியிடுவோர் ஆள் அடையாளத்தை உறுதி செய்ய வேண்டுமென தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த ஆவணங்கள் சரியானவை என்பதனை கட்சியின் குழுத் தலைவர் உறுதி செய்ய வேண்டும்.

கடந்த காலத் தேர்தல்களில் போட்டியிட்ட சில வேட்பாளர்கள் சொத்து விபரங்களை வெளியிடவில்லை.

இதற்கு விளக்கம் கோரிய போது, தமக்கு தெரியாமலேயே வேட்பாளர் பட்டியலில் தமது பெயரை உள்ளடக்கியுள்ளதாக தெரிவித்திருந்தனர்.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறான சர்ச்சைகள் ஏற்படாமல் இருப்பதனை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

## பாலியல் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண்ணை தேடி வலை வீச்சு

இலங்கைக்கும் மாலைதீவிற்கு இடையில் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாலைதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாலைதீவு பெண்களை இலங்கையிலும், இலங்கைப் பெண்களை மாலைதீவிலும் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுத்தியுள்ளாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய இலங்கைப் பெண் மாலைதீவில் தலைமறைவாகியுள்ளார்.


குறித்த பெண்ணை கைது செய்யும் நோக்கில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாலைதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் வர்த்தகம் தொடர்பிலான விசாரணை ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டிருந்த 20 மாலைதீவு பெண்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

மசாஜ் பார்லர் ஒன்றிற்கு இலங்கைப் பெண்களை அழைத்து அவர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களை மாலைதீவிற்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோள அரசியலுக்கு அப்பால்...



2010ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தால் இடைநிறுத்தப்பட்ட சிறப்பு ஏற்றுமதி வரிச் சலுகை எனப் பொருள்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீண்டும் இலங்கை பெற்றுக்கொள்ள இருப்பதாகக் கடந்தவாரம் தென்னிலங்கை ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன.

மனித உரிமை - நல்லாட்சி ஆகிய விவகாரங்களில் திருப்திகரமான விதத்தில் இலங்கை நடந்துகொள்ளத் தவறியதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இச்சலுகையை மீண்டும் இலங்கை பெற்றுக்கொள்ள இருபபதாக வெளிவந்த இச்செய்தி தமிழ் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தத் தவறவில்லை.

அதிலும் நான்காம் கட்ட ஈழப் போரில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் - மானுடத்திற்கு எதிரான குற்றச செயல்கள் போன்றவற்றை பன்னாட்டு சுயாதீன விசாரணைக்கு உட்படுத்துவதற்கான முன்மொழிவை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் நிறைவேற்றிய சில வாரங்களில் இச்செய்தி வெளிவந்தமை இலங்கை அரசாங்கத்தின் விடயத்தில் இரட்டை வேடத்துடன் மேற்குலகம் நடந்து கொள்கின்றதா? என்ற கேள்வியையும் தமிழ் மக்களிடையே தோற்றுவித்துள்ளது.

மனித உரிமைச் சர்ச்சையில் இழக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் சலுகையை குறைந்த வருமானத்தைக் கொண்ட நாடு என்ற அடிப்படையில் இலங்கை மீண்டும் பெற்றுக்கொள்ள இருப்பதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் வெளியிட்ட அறிவித்தல் இது விடயத்தில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதாக அமைநதது எனக் கூறின் மிகையில்லை.

உண்மையில் **ஜி.எஸ்.பி. பிளஸ** சலுகையை இலங்கை பெற்றுக்கொள்ள இருக்கின்றதா? இதுபற்றிய கேள்விக்கான பதில் அவ்வளவு கடினமானது அல்ல. உண்மையில் இது பற்றிய புரிதலைப் பெறுவதற்கு விண்வெளி விஞ்ஞான ஆய்வு எதிலும் நாம் ஈடுபடத் தேவையில்லை.

பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் காணப்படும் நாடுகளுடனான வணிகத் தொடர்புக்ளை விருத்தி செய்யும் நோக்கத்துடன் அந்நாடுகளுக்கு இரண்டு வகையான வரிச்சலுகைகளை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வருகின்றது. இதில் ஒன்று **'ஜிஎஸ்பி'** என அழைக்கப்படுகின்றது. மற்றையது **'ஜி.எஸ்.பி பிளஸ்'** என அழைக்கப்படுகின்றது. இதில் முன்னையது குறைந்த வருமானத்தைக் கொண்ட அனைத்து நாடுகளுக்கும் வழங்கப்படுகின்றது. மற்றையது மனித உரிமை - நல்லாட்சி போன்ற விடயங்களிலும், தொழிலாளர் நலன், சுற்றுச் சூழல் மேம்பாடு போன்ற துறைகளிலும் முன்னேற்றத்தைக் காண்பிக்கும் நாடுகளுக்கு வழங்கப்படுகின்றது. சாராம்சத்தில் இவ்விரு சலுகைகளும் ஏற்றுமதி வரிச் சலுகைகள்தான். இவற்றில் முன்னையது ஏனைய மேற்குலக நாடுகளால் பின்தங்கிய நாடுகளுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைக்கு ஒப்பானது. மற்றையது மேலதிக வரிச்சலுகைகளை - அதிலும் ஆடை ஏற்றுமதிக்கான சலுகைகளை கொண்டுள்ளது.

இவ்விரு சலுகைகளில் 2010 ஆம் ஆண்டு இலங்கை இழந்தது **ஜி.எஸ்.பி. பிளஸ்** எனப்படும் சிறப்பு ஏற்றுமதி வரிச்சலுகையையே. இதற்கான அதிகாரபூர்வ அறிவித்தல் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தால் விடுக்கப்பட்டு ஆறு மாதங்களின் பின் இச் சிறப்பு வரிச்சலுகை அதிகாரபூர்வமாக இடைநிறுத்தப்பட்டது. ஆனால் இச் சிறப்பு வரிச்சலுகை இடைநிறுத்தப்பட்ட போதிலும் **ஜி.எஸ்.பி.** எனப்படும் சாதாரண வரிச்சலுகை நிறுத்தப்படவில்லை.

குறைந்த வருமானத்தைக் கொண்ட நாடு என்ற அடிப்படையில் **ஜி.எஸ்.பி பிளஸ்** சிறப்பு வரிச் சலுகை நிறுத்தப்பட்ட பின்னரும் இவ்வரிச்சலுகையை இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வந்தது. இலங்கையைப் போன்று மொத்தம் 177 நாடுகள் இவ்வரிச் சலுகை ஊடாக ஐரோப்பிய சந்தைகளில் பயனடைந்தன.

எனினும் இவ்வரிச்சலுகையை பொருண்மிய ரீதியில் வளர்ச்சியடைந்த 87 நாடுகளுக்கு நீக்குவதற்கான சட்டம் 2012ஆம் ஆண்டின் இறுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தால் நிறைவேற்றப்பட்டது. இருந்த பொழுதும் இதனால் ஐரோப்பிய வணிக நிறுவனங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் கருத்திற் கொண்டு இச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஓராண்டு கால அவகாசம் ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டது.

இதன்படி கடந்த 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள இச் சட்டத்தின் கீழ் ஜி.எஸ்.பி சலுகையை பொருண்மிய ரீதியில் வளர்ச்சியடைந்த 87 நாடுகள் இழந்துள்ளன. ஆனால் பொருண்மிய ரீதியில் பின்தங்கிய நிலையில் காணப்படும் நாடு என்ற வகையில் இச்சலுகையை தொடர்ந்தும் இலங்கை பெறுகின்றது.

எனவே அமைச்சர் ரிசாத் பதியுதீன் அறிவித்திருப்பது போன்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் இழந்த **ஜி.எஸ்.பி. பிளஸ்** சிறப்பு வரிச் சலுகையை புதிதாக அமுலுக்கு வந்துள்ள சட்டத்தின் மூலம் பெறுவதற்கான தகுதியை இலங்கை பெறவில்லை. மாறாக **ஜி.எஸ்.பி பிளஸ** சிறப்பு வரிச்சலுகை இடைநிறுத்தப்பட்ட பொழுது இலங்கை தொடர்ந்தும் பெற்று வந்த ஜி.எஸ்.பி எனப்படும் சாதாரண வரிச்சலுகையையே தொடர்ந்தும் இலங்கை பெறப் போகின்றது.

சரி இப்பொழுது ஓர் கேள்வி எழலாம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைகது எதிரான தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்களில் ஈடுபடும் ஐரோப்பிய ஒன்றியம் எதற்காக ஜி.எஸ்.பி வரிச் சலுகையை தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்க வேண்டும்? 2010 ஆம் ஆண்டு ஜி.எஸ்.பி. பிளஸ் சிறப்பு வரிச்சலுகையை இடைநிறுத்தியமை போன்று இம்முறை இலங்கைக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் ஜி.எஸ்.பி வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்தியிருக்க வேண்டும் என்பதுதான் பலரது எதிர்பார்ப்பாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படுவதைத் தொடர்ந்து இலங்கை மீது பொருண்மியத் தடைகள் விதிக்கப்படலாம் என்ற ஊகங்கள் அண்மைக் காலங்களில் ஊடகங்கள் சிலவற்றில் எழுந்திருந்த சூழலில் இவ்வாறான எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடையே ஏற்படுவது இயல்பானதே.

ஆனால், யதார்த்தம் அதுவல்ல. இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மேற்குலகம் கொண்டு வரவுள்ள தீர்மானம் என்பது நீண்ட கால அடிப்படையில் முன்னெடுக்கப்பட இருக்கும் இராஜரீக யுத்தத்தின் முதலாவது தாக்குதல் நடவடிக்கைதான்.

இத்தீர்மானம் இலங்கை மீதான பொருண்மியத் தடைகளாக உருவெடுப்பதற்கு பல ஆண்டுகள் எடுககலாம். ஆனாலும் இதுவிடயத்தில் மதிநுட்பத்துடனும், வினைத்திறனுடன் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் செயற்பட்டால் இக்காலத்தை நாம் விரைவுபடுத்தலாம். சாராம்சத்தில் வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மேற்குலக நாடுகள் கொண்டு வரவிருக்கும் தீர்மானம் முதற்கட்டமாக நான்காம் கட்ட ஈழப் போரில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் - மானிடத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் பற்றிய சுயாதீன பன்னாட்டு விசாரணையை மேற்கொள்வதற்கான **'கொமிசன் ஒவ் இன்குயரி'** என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் விசாரணை ஆணையமாக உருவெடுப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன. இவ் விசாரணை ஆணையம் நான்காம் கட்டப் போரில் சிங்களம் இழைத்தது வெறும் போர்க்குற்றங்களும், மானுடத்திற்கும் எதிரான குற்றச்செயல்களும்மட்டுமன்றி இனப்படுகொலை குற்றங்களும் என்பதை ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்குப் பரிந்துரை செய்யும் வகையில் ஆதாரங்களை வழங்கும் பணிகளை விரைவாகப் புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் எடுக்க வேண்டும்.

எனவே இன்னமும் ஆரம்ப கட்டத்தை எட்டியிருக்காத மேற்குலகின் இராஜரீக யுத்தத்தில் உடனடியாக இலங்கை மீதான பொருண்மியத் தடைகளை மேற்குலகம் விதிக்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது.

தவிர தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு இலங்கைகது எதிரான இந்த இராஜரீக யுத்தத்தை மேற்குலகம் தொடங்குகின்றது என்று நாம் எவராது எண்ணினால் அதனைவிட அரசியல் கற்றுக்குட்டித்தனம் எதுவும் இருக்க முடியாது.

மேற்குலகம் தொடுக்கப் போகும் இராஜரீக யுத்தத்தை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது எமது வினைதிறன் மிக்க நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. இவ் வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்தத் தவறினால் மேற்குலகின் நலன்களை மட்டும் பூர்த்தி செய்யும் இராஜரீக யுத்தமாக மட்டுமே இது மாறும் அபாயமும் உண்டு.

இத்தருணத்தில் ஒருவிடயத்தை நாம் இங்கு குறிப்பிடுவது அவசியமாகின்றது. தமிழ் மக்களின் நலன்களில் உள்ள அக்கறையில் அல்லாது தனது பொருண்மிய நலன்களை ஈழத்தீவில் விரிவுபடுத்தி நிலைப்படுத்துவதற்கான ஆயுதமாகவே பன்னாட்டு சுயாதீன விசாரணை என்ற பொறிமுறையை மேற்குலகம் பயன்படுத்துகின்றது என்பதுதான் உண்மை. 1990 களில் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் மத்தியத்துவம் வகிப்பதற்கான விருப்பை பிரித்தானியா, நோர்வே, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் வெளியிட்டதன் சூட்சுமும், அதன் பின்னர் 1999ஆம் ஆண்டு அனுசரணையாளராக ஈழப்பிரச்சினையில் நோர்வே நுழைந்ததும், அதனைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு இணைத்தலைமை நாடுகள் என்ற கோதாவில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் வீரியத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கு நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகிய நாடுகள் எடுத்த முயற்சிகளும் சாராம்சத்தில் ஈழத்தீவில் மேற்குலகின் பொருண்மிய நலன்களை விரிவுபடுத்தி நிலைப்படுத்தும் நோக்கத்தையே கொண்டிருந்தன. இதனை விடுதலைப் புலிகள் நன்கு அறிந்திருந்தார்கள். இது பற்றி 1994ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விடுதலைப் புலிகள் ஏட்டில் பின்வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்:

"புலிகளை வெல்ல முடியாத ஒரு போரில் பெருந்தொகைப் பணம் விரயமாகிறது. யுத்தமும் முடிவில்லாத கதையாகத் தொடர்கிறது. அரசின் வலுவுக்கு இது அச்சுறுத்தலாக அமைகிறது. இலங்கையில் பெருமளவு முதலீடு செய்வதற்கோ, அன்றி இத்தீவை உலக முதலாளியத்தின் ஒரு வர்த்தக வலயமாக மாற்றுவதற்கோ, முடிவில்லாமல் தொடரும் இப்போர் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதனால் சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்க்குமாறு மேற்குலகம் இலங்கைக்கு அழுத்தம் போடுகிறது." இன்றும் கூட இதுதான் உண்மை.

(தொடரும்)

-சேரமான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# தைமாத இராசி பலன்கள்

# 14.01.2014-12.02.2014



## மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

**வைராக்கியத்தோடு செயற்பட்டு வருங்காலத்தை நலமாக்கிக் கொள்ளும் மேட இராசிநேயர்களே! உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர்!**

## புதிய புதிய ஒப்பந்தங்கள் கைகூட இருக்கும் மாதம்

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்கத்திலேயே உங்கள் ராசிநாதன் செவ்வாய் 6-ல் சஞ்சரிக்கின்றார். 8-க்கு அதிபதி 6-ல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் சில நல்ல பலன்கள் உங்களுக்கு வந்து சேரப்போகின்றன. நீண்ட நாட்களாக துன்புறுத்தி வந்த உடல் உபாதைகளிலிருந்து விடுபடுவீர்கள். கடன் சுமையில் பாதிக்கு மேல் கணிசமாகக் குறையும்.

'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற பழமொழி உங்களுக்கு பொருத்தமாக அமையப் போகிறது. வையகத்தார் போற்றும் விதத்தில் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். ராசியிலேயே கேது சஞ்சரிப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆலய விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள்.

சப்தம ஸ்தானத்தில் ராகு சனியோடு சேர்ந்து இருக்கின்றார். சனி உங்கள் ராசிக்கு 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதி ஆவதால் தொழிலை வளப்படுத்தி லாபத்தைச் சம்பாதித்துக் கொடுக்க வேண்டியது சனியின் கையில் தான் இருக்கிறது. அத்தகைய சனி உச்சம்பெற்று இருப்பது நன்மைதான். என்றாலும், அதன் பார்வை உங்கள் ராசியில் அல்லவா பதிகிறது!. எனவே மனச் சோர்வும், அடிக்கடி எடுத்த முடிவுகளை மாற்றிக் கொள்ளும் தன்மையும் ஒருசிலருக்கு உருவாகலாம்.

பார்க்கும் சனியால் பாதிப்புகள் ஏற்படாதிருக்க ஆலய தரிசனங்களை அடிக்கடி மேற்கொள்ளுங்கள். 'மாரியல்லால் ஒரு காரியமில்லை' என்பது ஒரு பழமொழி. 'மாரி' என்றால் 'மழை' என்று பொருள். வானம் பொய்த்தால் தானம் பொய்த்துவிடும் அல்லவா?

அதே போல 'காரி (சனி) அல்லால் ஒரு காரியம் இல்லை' என்று கூட உங்கள் ராசியை பொறுத்தவரை சொல்லலாம். எந்த காரியம் செய்தாலும் அதில் இடையூறு இல்லாமல் இருக்க நீங்கள் சனிக்கிழமைதோறும் சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும். எள் தீபம் ஏற்றி வழிபட்டால் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**வக்ர இயக்கத்தில் மூன்று கிரகங்கள**

பொங்கல் பண்டிகையும், மஞ்சு விரட்டும், உழவர் திருநாளும் எங்கும் கொண்டாடி மகிழும் இம்மாதத்தில் மூன்று கிரகங்கள் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார்கள். இந்த வக்ரம் ஒரு சிலருக்கு நன்மையை வழங்கும். ஒரு சிலருக்கு வழிபாட்டின் மூலமே வளர்ச்சியைக் கொடுக்கும். அவற்றில் ஒன்று சுக்ரன், மற்றொன்று புதன். மூன்றாவது கிரகம் குரு. சுக்ரன் உங்கள் ராசிக்கு 2, 7-க்கு அதிபதியாவார். எனவே சுக்ரனின் வக்ர காலத்தில் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லவேண்டும். அப்பொழுது தான் கூடுதல் அமைதி கிடைக்கும். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஜனவரி 28 முதல் புதன் வக்ரம் பெறுகிறார். புதன் உங்கள் ராசிக்கு 3, 6-க்கு அதிபதி என்பதால் இந்த வக்ரம் உங்களுக்கு இனிய பலன்களையே கொடுக்கும் என்று சொல்லலாம். குறிப்பாக விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். கொடுத்த கடன்கள் வசூலாகும். உத்தியோக முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குரு தொடர்ந்து வக்ர இயக்கத்திலேயே இருக்கிறார். 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்ரம் பெறும் பொழுது பெற்றோர்களின் பாசம் குறையும். பாகப்பிரிவினைகள் திருப்திகரமாக இருக்காது. குடும்பச் சுமை கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும்.

இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப் பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம் வருமானம் திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த சிக்கல்கள் விலகும். கணவன்-மனைவிக்குள் வந்த கருத்து வேறுபாடுகள் அகலும். வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புதனின் வக்ர காலத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர் வழி ஆதரவோடு புதிய ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்வீர்கள். பிள்ளைகளின் திருமண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதற்கான முயற்சிக்கு மாற்று இனத்தவர்கள் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர். சர்ப்ப கிரக ஆதிக்கம் இருப்பதால் யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்தி செய்து வருவது நல்லது.

## சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் இடப இராசிநேயர்களே! உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும்!**

## எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறி மகிழ்ச்சிப்படுத்தும்

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்க நாளிலேயே உங்கள் ராசிநாதன் சுக்ரன் வக்ரம் பெறுகிறார். அதன்பிறகு தன பஞ்சமாதிபதியான புதன் வக்ரம் பெறுகிறார். தொடர்ந்து அஷ்டம லாபாதிபதியான குருவும் வக்ர இயக்கத்திலேயே இருக்கிறார். அத்தனைக்கும் மத்தியில் பிறக்கும் இந்த தை மாதத்தில் குரு சந்திர யோகமும், புத-சுக்ர யோகமும், உச்ச சனியின் ஆதிக்கமும் அமைந்திருக்கிறது. எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்தமாதம் சிறப்பாகவே இருக்கும்.

பண்டிகை காலங்களில் பாலிய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய எந்த துறையைத் தேர்ந்தெடுக்கலாம், அல்லது இருக்கும் துறையே சரியான துறைதானா என்றெல்லாம் சிந்திப்பீர்கள். பொதுவாக 7,12-க்கு அதிபதியான செவ்வாய் 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம்.

தொழில் ஸ்தானத்திற்கு அதிபதி சனி உச்சம் பெற்று இருப்பதால் தொழிலில் இருநத இடையூறுகள் அகலும். மாற்று இனத்தவர் உங்களின் கூட்டுமுயற்சிக்கு கைகொடுத்து உதவுவர். புதிய திருப்பங்கள், வருமான உயர்வு, தந்தைவழி ஒற்றுமை, வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் அனைத்தும் வந்து சேரும். 6ஆம் இடத்து ராகு பணப்புழக்கத்தை அதிகரிக்க வைக்கும். என்றாலும், 12-ல் கேது சஞ்சரிப்பதால் சேமிப்பிலும் சிறிது கரையும்.

உடல் நிலையில் சிறிது கவனம் செலுத்துவது நல்லது. ஒவ்வாமை மற்றும் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு ஒரு சிலர் ஆட்படலாம். எனவே, ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தி, அசதியை போக்கி, உற்சாகத்தோடு செயற்படுவது நல்லது. அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு செல்வாக்கு மேலோங்கும். ஒவ்வொரு சனிக்கிழமையும் சனிபகவான் சந்நிதிக்குச் சென்று எள் தீபம் ஏற்றி வழிபடுவதோடு, சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது நல்லது.

ராசிநாதன் 6-க்கு அதிபதியான சுக்ரன் தன பஞ்சமாதிபதி புதனுடன், சுகாதிபதி சூரியனுடனும் இணைந்து 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது ஒரு அற்புதமான யோகமாகும். புத-ஆதித்ய யோகமும், புத-சுக்ர யோகமும் இணைந்து மாதம் தொடங்குவதால் கல்விக்காக எடுத்த முயற்சி வெற்றி தரும். கனவுகள் நனவாகும். செல்வ செழிப்பு மிக்க ஒருவரின் ஒத்துழைப்போடு சில காரியங்களில் இருந்த தாமதங்கள் அகலும்.

**கிரகங்களின் வக்ர இயக்கம்!**

மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசிநாதன் சுக்ரன் வக்ரம் பெறுகிறார். 6-க்கு அதிபதியாகவும் சுகரன இருப்பதால் இந்த வக்ரம் நன்மையையே வழங்கும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு ஒரு சிலருக்கு வந்துசேரும். தங்கம், வெள்ளி தாராளமாக வந்து சேரும். தாயின் உடல் நலம் சீராகும். மங்கள நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பெப்ரவரி 2-ம் திகதி வரை இந்த சுக்ரனின் வக்ர இயக்கம் நீடிக்கிறது.

அடுத்து வரும் புதனின் வக்ரம் அவ்வளவு நல்லதல்ல. ஜனவரி 28-ம் திகதி புதன் வக்ரம் அடையப் போகிறார். தன பஞ்சமாதிபதி வக்ரம் பெறும் பொழுது குடும்பச் சுமை கூடும. தன வரவில் தடைகள் ஏற்படும். கொடுப்பதாகச் சொன்னவர்கள் கொடுக்க இயலாது. தருவதாகச் சொன்னவர்கள் தர இயலாது.

குருவின் வக்ர காலம் மாதம் முழுவதும் இருக்கிறது. இந்த வக்ர காலம் உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும். சொந்த தொழில் செய்வோர்கள் மேன்மையடைவர். விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்திணைவர். கலகலப்போடு செயற்பட்டு காரியத்தில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு குரு பகவான் எதிரி என்பதால் அதன் வக்ர காலத்தில் எதிர்பார்ப்புகள் ஏராளமாக நிறைவேறும். குறிப்பாக ஆரோக்கிய தொல்லை அகலும். அடுத்தவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பகைவர்கள் நட்பாவார்கள். பாசக்கரம் நீட்டாத உறவினர்கள் கூட இப்பொழுது உதவிக்கரம் நீட்டுவர்.

இம்மாதம் தொழில் வளர்ச்சி மேலோங்கவும், தொகை வரவு திருப்திகரமாக அமையவும் நந்தியெம்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**


இம்மாதம் எண்ணங்கள் ஈடேறும் மாதமாகக் கருதலாம். தாய் வழி ஆதரவு கூடும். 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்று இருந்த உங்கள் கணவர் குணமறிந்து நடந்து கொள்வார். கருத்து வேறுபாடுகள் அகலும். மாதத்தின் மையப்பகுதியில் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி ஆபரணங்களை வாங்க முன் வருவீர்கள். ஆரோக்கியப் பாதிப்புகள் அகலும். பிரிந்து சென்ற உறவினர்கள் மீண்டும் வந்திணைவர். சேமிப்பு அதிகரிக்கும் இந்த நேரத்தில் புதிய வாகனங்கள் மற்றும் கணிப்பொறி போன்றவைகளை வாங்கி மகிழ்வீர்கள். குரு வழிபாடும், சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாடும் செய்து வந்தால் கூடுதல் நன்மை கிடைக்கும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மைக்ரோசொப்ட் ஒபிஸ் 2007 வேர்ட்டில் உங்கள் ஆவணங்களை பாதுகாக்க...

மைக்ரோசொப்ட் வேர்ட்டை ஓப்பன் செய்து நீங்கள் ஒரு செய்தியை டைப் செய்து முடித்துவிட்ட பின்பு இங்கு குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள Save As என்ற இடத்தை கிளிக் செய்யுங்கள் அடுத்து Word Document என்பதை கிளிக் செய்யுங்கள்.





பின்பு Tools ஐ கிளிக் செய்து General Options... ஐ கிளிக் செய்யுங்கள்





பின்பு இங்கு குறிப்பிட்ட இடத் தில் பாஸவேர்டு டைப்செய்து ok பட்டனை கிளிக் செய் யுங்கள்.

மறுபடியும் ஒரு முறை அதே பாஸ்வேர்டை டைப் செய்யுங்கள்.





MS office Word

பின்பு உங்கள் பைலுக்கு பெயர் கொடுத்து Save பட்டனை கிளிக்செய்யுங்கள்.




Microsoft Office 2007

பின்பு உங்கள் வேர்ட் பைலை கிளிக் செய்து ஓப்பன் செய்தால் இதுபோல் பாஸ்வேர்டு கேட்க்கும். நீங்கள் கொடுத்த பாஸ்வேர்டை டைப் செய்து ok பட்டனை கிளிக் செய்யுங்கள்.




# 12 வயதிலும் மக்கள் மனதில் விண்டோஸ் எக்ஸ்.பி.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில், எக்ஸ்.பி. பயன்பாட்டினை பன்னாட்டளவில் 14 சதவீதம் என்ற அளவிற்குக் கொண்டு வர வேண்டும் என்ற மைக்ரோசொப்ட் நிறுவன இலக்கு அநேகமாக நிறைவேறாது என்றே எண்ணத் தோன்றுகிறது.

சென்ற நவம்பரில், விண்டோஸ் எக்ஸ்.பி. பயன்பாடு, முந்தைய மாதத்திலிருந்து சற்றும் குறையாமல் அப்படியே உள்ளது. 33.22 சதவீதப் பயன்பாட்டுடன், பயன்படுத்தப்படும் ஒப்பரேட்டிங் சிஸ்டங்களில், எண்ணிக்கை அடிப்படையில் இரண்டாவது இடத்தைப் பிடித்தவாறு உள்ளது.

Microsoft Windows xp

சென்ற ஒக்டோபரில் இது 32.24 வீதமாக இருந்தது. செப்டெம்பரில் இது 31.24 வீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

விண்டோஸ் எக்ஸ்.பி. முற்றிலுமாகக் கைவிடப்படும் நாளுக்கு இன்னும் நான்கு மாதங்களே உள்ள நிலையில், அதன் இறுதி நாளான ஏப்ரல் 8க்குப் பின்னரும், பயன்பாட்டில் இருக்கும் என்றே தோன்றுகிறது.

இந்த 12 வயதாகும் விண்டோஸ் எக்ஸ்.பி. சிஸ்டத்தினை மக்கள் விட்டுவிட மனதில்லாமல், என்னதான் நடக்கும் பார்ப்போமே என்ற மனதுடன் இருக்கிறார்கள் என்பதுதான் தெரிய வருகிறது.


சென்ற ஒக்டோபரில், அதிகார பூர்வமாக வெளியிடப்பட்ட விண்டோஸ் 8.1, ஒப்பரேட்டிங் சிஸ்டம் சந்தையில், சென்ற நவம்பரில் 2.64 சதவீதம் பயன்பாட்டில் உயர்ந்தது. ஒக்டோபரில் இது 1.72 வீதமாக இருந்தது.

விண்டோஸ் 8,தன் பங்கினை இழந்து 6.66 சதவீதமாக இருந்தது. அக்டோபரில் இது 7.52 வீதமாக இருந்தது. இந்த இரண்டும் சேர்த்து, 9.3 சதவீதப் பயன்பாட்டினைக் கொண்டுள்ளன.

விண்டோஸ் 7 ஒப்பரேட்டிங் சிஸ்டம் முதல் இடத்தில் உள்ளது. நவம்பரில், இது கூடுதலாகி, 46.64 சதவீதமானது. ஒக்டோபரில் இதன் பங்கு 46.42 வீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

விண்டோஸ்விஸ்டா 3.57 வீதமாகக் குறைந்துள்ளது. அக்டோபரில் இது 3.63 வீதமாக இடத்தைப் பிடித்திருந்தது. டிசெம்பரில், விண்டோஸ் 8.1, விஸ்டாவின் பங்கினை மிஞ்சும் என எதிர்பார்க்கலாம்.

# குரோம் பிரவுசர் பற்றி சில...




ஏதேனும் ஓர் இணைய தளத்தை, குரோம் பிரவுசர் வழியாகக் காண்கையில், அது முடக்கப்படுகிறதா? கிராஷ் ஆகித் தொடர்ந்து பயன்படுத்தாத நிலையில் உள்ளதா? அதே வேளையில், பயர்பொக்ஸ், இன்டர்நெட் எக்ஸ்புளோரர் போன்ற மற்ற பிரவுசர்களில் இந்த பிரச்சினை இல்லாமல், சரியாகச் செயல்படுகிறதா? அப்படியானால், இதனை கூகுள் குரோம் இணைய தளத்திற்குத் தெரிவிக்க வேண்டியது அவசியம். இதற்கான வழிமுறைகளை இங்கு காணலாம் .


முதலில் அந்த இணையத்தளம் செல்லவும். அதன் சரியான முகவரியைத் தெரிந்து பயன்படுத்தவும். குரோம் பிரவுசரின் வலது மேல் மூலையில் உள்ள ரிஞ்ச் பட்டனைக் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில், "Tools" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இதில், "Report an issue" என்பதை அடுத்துத் தேர்ந்தெடுக்கவும்.

இப்போது புதிய "Feedback" என்னும் டேப் கிடைக்கும். அதன் கீழாக "Tell us what is happening (required)" என்று ஒரு பெட்டி கிடைக்கும். இதில் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை குறித்தும், அது எந்த சூழ்நிலையில் ஏற்பட்டது எனவும் தெளிவாகக் குறிப்பிடவும்.

குறிப்பிட்ட இணையத்தளத்தில் எதனையேனும் தேடுகையில், இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருந்தால், அது எந்த வகையான தேடல் என்றும் குறிப்பிடவும். உங்களுடைய யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட் எதனையும் தர வேண்டாம். ப்ளக் இன் புரோகிராம் பயன்படுத்தும் போது கிராஷ் ஏற்படுகிறதா அல்லது ஏதேனும் குறிப்பிட்ட டேப்பில் கிளிக் செய்திடுகையில் ஏற்படுகிறதா என்பதனையும் விளக்கிக் கூறவும். "Include this URL" மற்றும் "Include this screenshot" ஆகியவற்றில் டிக் அடையாளம் ஏற்படுத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.தொ. இணையத்திற்கு தலைவர் நியமனம்



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் இணையத்தின் தலைவராக கே.சூரியகுமாரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு இதுவரை காலமும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பு என்ற பேரில் இயங்கிவந்த இந்த அமைப்பு தற்போது இணையமாக மாற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிர்வாக சபைத் தெரிவின் போதே தலைவராக முன்னாள் செயலாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பின் தலைவராகயிருந்த எஸ்.தவரட்ணம் மரணமடைந்ததையடுத்து, மேற்படி நிர்வாக சபைத் தெரிவு நேற்று முன்தினம் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இது வரைகாலமும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வந்த இந்த அமைப்பின் பெயரும் மாற்றப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலத்தில் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் இணையம் என்ற பெயரில் மேற்படி அமைப்பு இயங்குமவுள்ளதாகவும் அதன் தலைவர் சூரியகுமாரன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். (அ-6)

# பிரிவுத்துயர் பகிர்வு



**இராசரெட்ணம் மகேஸ்வரன்**

(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்)
மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், காரை நகர், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரெட்ணம் மகேஸ்வரன் 13 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை லண்டனில் நடைபெறும்.



**கணபதிப்பிள்ளை கதிரவேலு**

திருகோணமலை பாலையூற்றைப் பிறப்பிட மாகவும் புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவுங்கொண்ட கணபதிப்பிள்ளை கதிரவேலு 14ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று முன்தினம் நடைபெற்றது.



**திருமதி. தம்பிராசா மகேஸ்வரி**

சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட தம்பிராசா மகேஸ்வரி 15 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.



**திருமதி. சௌந்தரிப் பிள்ளை சுப்பிரமணியம்**

திருகோணமலை தம்பலகாமம் பட்டிமேட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சௌந்தரிப்பிள்ளை சுப்பிரமணியம் 15 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.



**பிரமஸ்ரீ இரத்தினசபாபதிஐயர் வெங்கடேச ஐயர்**

கொக்குவில் கிழக்கு சோதிபரிபாலன மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாக்கிய பஞ்சாங்கக் கணிதர் பிரமஸ்ரீ இ.வெங்கடேச ஐயர் 15 ஆம் திகதி புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.



**மாணிக்கம் ஆனந்தமூர்த்தி**

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஆவடி ஒழுங்கை வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் தற்போது ஆனந்தன் பண்ணை 8 ஆம் வாய்க்கால் உருத்திரபுரம் கிளிநொச்சியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் ஆனந்தமூர்த்தி 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.

# உருத்திரா அபிஷேகமும் விசேட பூசை நிகழ்வும்

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் நடத்தப்படவுள்ள உருத்திரா அபிஷேகமும் விசேட பூசை நிகழ்வும் தைப்பூசத் தினமான இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கோட்டை முனீஸ்வரர் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஏ.சி. பெரேரா, பிரதான ஜெயிலர் சீ.இந்திரகுமார் உட்பட சிறைச் சாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இவ் அபிஷேக உற்சவமானது வருடாந்தம் யாழ்ப்பாண சிறைச் சாலை உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. (அ-9-21)

# புகையிலை மற்றும் வெங்காய செய்கையில் நோய்த்தாக்கம்





(கரவெட்டி)
வடமராட்சி பிரதேசத்தில் காலம்தாமதித்து பெய்து வரும் மழையினால் விவசாயப் பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இதனால் விவசாயிகள் பல இலட்சம் ரூபா நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் பெய்த கால தாமத மழையினால் விவசாயிகளின் புகையிலை மற்றும் வெங்காயப் பயிர்ச் செய்கைகள் அழிவடைந்துள்ளதோடு, புகையிலை செய்கையில் கிருமிகளினால் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

வெங்காயப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த்தாக்கத்தினால் அதிகளவான வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இவ் விவசாயிகள் வங்கிகளில் மற்றும் அயலவர்களிடம் பல இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று விவசாயத்திற்கு முதலீட்டினை செய்துள்ளனர்.

இந்நிலையில் கால நிலை மாற்ற மழையினாலும் கிருமி தொற்றினாலும் பயிர்கள் அழிவடைந்துள்ளதனால் விவசாயிகள் கடனை மீளளிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே விவசாய அதிகாரிகள் இதில் கவனமெடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விபரங்களை சேகரித்து நஷ்டஈடு வழங்க முன்வரவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-24)

# தைப்பூச திருவிழா

திருமுறுகண்டி பிள்ளையார் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா இன்று காலை 10 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இத் திருவிழாவில் காலை 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகி நண்ப கல் 12 மணிக்கு விசேட பூசைகளைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவரவுள்ளார். (அ-9)

# மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் சங்கிலியன் மன்றம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும்.

இதில் நீரிழிவு இரத்த அழுத்தம் மற்றும் பலவகையான நோய்களுக்கான பரிசோதனையும் ஆலோசனைகளும் சிகிச்சையும் வழங்கப் படவுள்ளது.

தற்பொழுது சிகிச்சை பெறுபவர்கள் தம் வசமுள்ள மருத்துவ குறிப்புக்களையும் கொண்டு வருமாறு சங்கிலியன் மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (அ-2)

# கடற்கொள்ளையர்களை தடுக்க இலங்கை உதவும்

## பிரதி அமைச்சர் நியோமல் தெரிவிப்பு

இந்து சமுத்திரத்தில் கடல் கொள்ளைக் காரர்களை எதிர்கொள்ளவும் வளைகுடா நாடுகளின் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதிலும் கடற் புலிகளை தோற்கடித்து அழித்தொழித்த இலங்கையின் அனுபவங்கள் பெரும் பயன்தரக்கூடியவை என வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமல் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் பெரேரா, கடந்த ஜனவரி 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு மஸ்கற் சென்றிருந்தார்.

சீனாவுடன் சகந்திர வர்த்தக ஒப்பந்த மொன்றை செய்யவுள்ள இலங்கை, அரபு நாடுகளுக்கான தென் கிழக்காசிய நுழைவாயிலாக வரவுள்ளது.

தென் கிழக்காசிய நாடுகளுக்கான கடல் பாதையில் உள்ள கொழும்பு துறைமுகம், பெரிய தாங்க் கப்பல்களையும் உள்வாங்கும் தகுதியுள்ளது. எனவே இலங்கை, வளைகுடா நாடுகளுக்கான மீள் ஏற்றுமதி மையமாகமாற முடியும்.



"ஓமான் உட்பட வளைகுடா நாடுகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கும் பொருட்களை எம்மால் சிறு கப்பல்கள் மூலம் இந்த பிராந்தியத்திலுள்ள வேறு நாடுகளுக்கு அனுப்பிவைக்க முடியும்" என பிரதி அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# காலாவதியான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன

(கொழும்பு)
புறக்கோட்டையில் அமைந்துள்ள சில்லறை விற்பனை நிலையங்களில் கொழும்பு மாநகர சபையினர் நடத்திய சோதனையில், 14 மில்லியன் ரூபாய் பெறுமதியான காலாவதியான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருட்கள் அனைத்தும் கொழும்பின் முக்கிய பகுதிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், கருவாடு, சீனி, பேரீச்சம் பழங்கள், உருளைக் கிழங்கு, கொத்தமல்லி, மிளகு, வெங்காயம் ஆகிய பொருட்கள் சாக்குப் பைகளில் அடைக்கப்பட்டு இருந்ததாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

இவற்றின் பெறுமதி 6 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநகர் அ.த.க.

# பாடசாலைக்கான மின்விநியோக நடவடிக்கைகள் திடீர் நிறுத்தம்

கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலைக்கு சிபார்சு செய்யப்பட்ட மின் விநியோகத்திட்டம் திடீரென நிறுத்தப்பட்டது ஏன் என சம்பந்தப்பட்டோரிடம் பெற்றோர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

மேற்குறித்த பாடசாலையில் பயிலும் மாணவர்கள் விளையாட் டுத்துறை, கல்வி ஆகியவற்றில் மாகாண, தேசியமட்டங்களில் சாதனை களைப் படைத்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்பாடசாலையின் கணனிக் கல்விக்கு மின்சார வசதி யின்மையானது பெரும் குறைபாடாக காணப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு இப்பிரதேசத்திலுள்ள பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் குறித்த பாட சாலையிலிருந்து 500 மீற்றர் தூர மளவில் வழங்கப்பட்டிருந்த மின் சாரத்தைப் பெற்றுத் தருமாறு வவு னியாவிலுள்ள வடக்கின் வசந்தம் மின் விநியோகப் பகுதியினரிடம் கோரினர்.

மின்சாரசபையினரின் சில அறிவுறுத்தல்களுக்கு அமைய அவ் வறிவுறுத்தல்கள் செயற்படுத்தப் பட்டு அப்பகுதியில் உள்ள கோயில்கள், பாடசாலைகள் என்பனவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.



மின் விநியோகத்திற்காக வெட்டப்பட்ட வீதியோர மரங்கள்

இதையடுத்து இவ்வருடம் தொடக்கத்தில் உருத்திரபுரம் மேற்கில் மின்சார பாவனையிலுள்ளள இடத்திலிருந்து சிவநகர் அ.த.க. பாடசாலை வரையிலான பகுதியில் மின் கம்பங்கள் நாட்டும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டு, அப்பகுதியிலிருந்த குடியிருப்பாளர்களை வேலியோரங்களிலுள்ள மரங்களை வெட்டுமாறு E அடையாளம் இடப்பட்டது.

இவ்வாறாக துரித கதியில் மின் விநியோக வேலை நடைபெற்று வந்த நிலையில், திடீரென அனைத்து வேலைகளும் நிறுத்தப்பட்டு, நாட்டப்பட்ட மின்கம்பங்கள், வடங் கள் என்பன எடுக்கப்பட்டு வேறாரு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள் ளன.

பாடசாலைக்கு சிபார்சு செய் யப்பட்ட மின் விநியோகத்திட்டம் திடீரென நிறுத்தப்பட்டது ஏன் என சம்பந்தப்பட்டோரிடம் கேள்வியெழுப்பியு ள்ள மக்கள், மீண்டும் அச் சேவையை வழங்குமாறு கோரி க்கை விடுத்துள்ளனர். (அ-9)

# கத்திமுனையில் கொள்ளை; தம்பதிகள் படுகாயம்

(கனகபுரம்)

குஞ்சுப் பரந்தன் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு கத்தி முனையில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பரந்தன் பிரதேசத்திலுள்ள குஞ்சுப்பரந்தன் எனும் கிராமத்திலுள்ள வீடொன்றில் 8 பேர் கொண்ட கும்பலொன்று நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு 9.30 மணியளவில் கத்தி, கோடரி சகிதம் உள் நுழைந்துள்ளனர்.

இவ்வாறாக ஆயுதங்களோடு உள்நுழைந்த கும்பல் வீட்டிலிருந்த குடும்பஸ்தரையும் மனைவியையும் தாக்கிவிட்டு இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், மடிக்கணனி, 8 ஆயிரம் ரூபா பணத்தையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த நிலையில், காசித்தம்பி பரமசிவம் (வயது 57), ராஜேஸ்வரி (வயது 43) தம்பதிகள் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த தினம் இக்கும்பல் அப்பகுதியில் இன்னுமொரு வீடொன்றில் புகுந்து பொருட்கள், பணம், நகை என்பனவற்றை திருடிச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது. (அ-9-259)

# இளையோருக்கு நேர்முகத்தேர்வு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வெளிநாட்டுவேலைத் திட்டத்திற்கு இளையோரை தெரிவு செய்வதற்கான நேர் முகத்தேர்வு இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந் துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டக் காரியாலயத்தில் நடைபெறும். இதற்கு 01.01.2014 ஆம் திகதி 18 தொடக்கம் 28 வயதிற் குட்பட்டவர்கள் பங்கு பற்ற முடியும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களுக்கு 0212060017, 0776178314, 0777740645 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு முல்லைத்தீவுமாவட்ட இளை ஞர் கழக சம்மேளன தலைவர் ச. தவசீலன் கேட்டுள்ளார். (அ-15-23)






## முச்சக்கரவண்டி சங்க நிர்வாகிகள் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முச்சக்கரவண்டி சங் கத்தினரின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண் டபத்தில் நடைபெற்றது.

இதன்படி நிர்வாகத் தலைவராக தம்பிராசா நவநீதன், உபதலை வராக சுப்பையா நந்தன், செயலாளர் சண்முகரத்தினம் இந்திரகுமார், உபசெயலாளராக காசிநாதன் மணிவண்ணன், பொருளாளராக நடராசா சிவகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (9)





வெற்றிச் செல்வி எழுதிய துளிர் விழும் துயரங்களும் நம்பிக்கைகளும் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் மன்னார் கலையருவி மண்டபத்தில் இடம்பெற்றபோது... (படங்கள்:- 'குருமன்காடு செய்தியாளர்)

# தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தினால் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் முகத்துவாரம் தொடக்கம் சாலை முகத்துவாரம் வரையான சிறுகடல் நீரேரிகளில் தடை செய்யப்பட்டுள்ள வலைகளைப் பயன்படுத்துபவர் மீது கடும் நட வடிக்கை எடுக்கப்படுமென்ற சட்ட மூலம் கடந்த 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக முல்லை.மாவட்ட கடற்றொழில் கூட் டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த.சசிரோகன் அறிவித்துள்ளார்.

சிறுகடல் நீரேரியில் தங்கூசி வலை, கூட்டுவலை,படுப்பு வலை, இழுப்புவலை போன்ற வலை களை பயன்படுத்தி தொழிலில் ஈடுபட வேண்டாமென ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்த போதிலும் அதனை கடற்றொழிலாளர்கள் பின்பற்றவில்லை.

இதையடுத்து கொக்கிளாய் ஆறு, நாயாறு, நந்திக்கடல், சாலை போன்ற கடல்நீரேரிகளில் தடை செய் யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துபவர்கள் மீது நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முடிவெடுத்துள்ளது. (அ-9-267)

# கொக்கிளாய் உப அலுவலகத்திற்கு உரிய வசதிகளை ஏற்படுத்துங்கள் மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கொக்கிளாய் உப அலுவலகத்திற்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து மக்கள் முழு நேர சேவையைப் பெற்றுக் கொள்ள உதவுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பிரதேச சபையின் கீழ் உப அலுவலகங்கள், முல்லைத்தீவு, முள் ளியவளை, முள்ளிவாய்க்கால், செம்மலை, கொக்கிளாய் ஆகிய பிரதேசங்களில் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் மேற்குறித்த உப அலுவலகங்களில் கொக்கிளா யைத் தவிர ஏனைய அலுவல கங்க ளின் கீழ் பொதுச்சந்தை, நூல் நிலையம் அதற்கான நிரந்தர கட்டடம் என் பன அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கொக்கிளாய் உபஅலுவலகத்தின் கீழ் கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய 6 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து40 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்கள் யுத்தத்தினால் இடம் பெயர்ந்து 2010, 2011 ,2012 ஆம் ஆண்டிலேயே மீள்குடியேற்றப்பட்டனர்.

இம் மக்கள் இப்பிரதேச சபையின் சேவையைப் பெற்றுக் கொள்ள முல்லைத்தீவிலுள்ள தலைமைச் செயலகத்திற்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது

இக் கருநாட்டுக்கேணியிலுள்ள தனியார் வீடொன்றில் பகுதி நேர சேவையை மாத்திரமே வழங்கி வருகின்றது.

எனவே ஏனைய 4 உப அலுவலகங்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள வச்தி வாய்ப்புக்களை கொக்கிளாய் உப அலுவலகத் திற்கும் பெற்றுத்தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

# கிளிநொச்சியில் உழவர் பெருவிழா

வடமாகாண விவசாய கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு இணைந்து நடத்தும் உழவர் பெரு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தின ராக யாழ் பல்கலைக்கழக விவசாயபீட பேராசிரியர் கு.மிகுந்தன் ஆகியோரும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணசபை அமைச்சர்கள், வட மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் தமிழகக்கவிஞர் யுக பாரதி தலைமையில் கவியரங்கும் கலைமாமணி குலபூஷணி கல்யாண ராமனின் இசைப்பாடலும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெறும்.

இவ் விழாவில் 2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் பாற்பண்ணையாளர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையைக் கொன்று சுளகால் மூடி விட்டு யானை வரவில்லை என்றாளாம்.

~ தமிழ்ப் பழமொழி~

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk


## எல்லாம் வல்ல பரமபிதாவே! இவருக்கு பாவ மன்னிப்பு அளித்தருளும்

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த அமெரிக்கத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். இதன்போது வன்னிப்போர் நிலைமைகள் குறித்து ஆயர்கள், தூதுவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

2009-ம் ஆண்டு மே மாதம் 18-ந் திகதி முடிவுற்ற வன்னிப்போர் விளைவித்த நாசகாரங்கள் உலகம் அறிந்தவை.

வன்னிப்போரில் அகப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் தங்கள் உறவுகளை இழந்து முட்கம்பி வேலிக்குள் அடைபட்ட துயர் கொஞ்சமல்ல.

எனினும் இந்த விடயங்கள் மூடிமறைக்கப்படுவதுதான் கொடுமையிலும் கொடுமை.

இத்தகைய கொடுமைகளை ஊடகங்கள் வெளிப்படுத்தியதன் காரணமாக ஐ.நா செயலர் பான் கீ மூனும் எதுவும் செய்ய முடியாமல் இலங்கையில் நடந்த போர்க் குற்றம் தொடர்பில் விசாரணை தேவை எனக் கூறியிருந்தார்.

வன்னிப் போர் முடிந்த கையோடு இலங்கைக்கு வருகை தந்து உலங்குவானூர்தியில், போர் நடந்த வன்னி பெருநிலப்பரப்பைச் சுற்றிப் பார்த்த ஐ.நா செயலாளர் பான் கீ மூனின் மூடு கண்ணுக்கு அழிவு நடந்தது தெரிந்திருக்கவில்லை.

காலக்கிரமத்தில் சனல் 4 ஊடகம் கொட்டித் தள்ளிய உண்மைகளுக்குப் பின்பே, இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் அரங்கேறலாயிற்று.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களை தடுத்து நிறுத்துவதற்கு ஐ.நா சபை தவறிவிட்டது என்பதைச் செயலாளர் பான் கீ மூன் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டார்.

இந்நிலையில் வட புலத்திற்கு வரும் வெளிநாட்டுத் தூதுவர்கள், மறைமாவட்ட ஆயர்களை சந்திக்கும் போது அவர்கள் நடந்தவற்றை எடுத்துக் கூறுவது அவர்களின் கடமை.

திருச்சபையில் இணைந்து இறைபணி ஆற்றுபவர்கள் எப்போதும் உண்மை பேசவேண்டும் என்ற அடிப்படையில், வன்னிப் போரில் நடந்த கொடூரங்களை யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகமும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் அவர்களும் அமெரிக்க தூதுவர்களிடம் எடுத்துக் கூறியிருந்தனர்.

வன்னிப் போரின் போது நடந்த குண்டுப் பாவனை தொடர்பில் ஆயர்கள் கூறிய விடயத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என வணக்கத்துக்குரிய கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் தெரிவித்திருப்பது கவலைக்குரியது.

வட பகுதியைச் சேர்ந்த இரண்டு மறை மாவட்ட ஆயர்கள் கூறிய கருத்தை ஏற்க முடியாது எனக் கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறுவாராக இருந்தால், வன்னிப் போரில் நடந்த அத்தனை குண்டுத் தாக்குதல்களையும் அவர் உடனுக்குடன் நன்கு அறிந்தவராக இருந்திருக்க வேண்டும்.

அதேநேரம் வன்னிப்போரில் அகப்பட்டு அப்பாவித் தமிழ் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள் என்பதை வெளிப்படுத்தி, தமிழ் மக்களைக் காப்பாற்றி இருக்க வேண்டும்.

அதனைச் செய்யாத கர்தினால் மல்கம் ரஞ்சித் இப்போது வட பகுதி ஆயர்களின் கருத்தை அடியோடு வெட்ட நினைப்பது மகா பாவத்துக்குரியது.

எல்லாம் வல்ல பரம பிதாவே! திருச்சபையின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட இரண்டு ஆயர்களின் கருத்தை, அவர்கள் தமிழர்கள் என்பதால் நிராகரிக்கும் கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்களுக்கு பாவ மன்னிப்பு அளித்தருளும்.

வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு என்ற உமது மகா வாக்கியத்துக்கு இணையாக நாம் செய்யக் கூடியதும் உம்மிடம் வேண்டக் கூடியதும் அவருக்கான பாவ மன்னிப்பே ஆகும்.

ஆண்டவரே! சிங்கள இனத்துவேசத்தால் கர்தினால் மல்கம் ரஞ்சித் செய்த பாவத்தை மன்னித்தருளும். ஆமென்.

## இளைஞர்கழக நிர்வாக தெரிவு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக ஜே/145 வடலியடைப்பு இளைஞர் கழகத்தின் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் புதன் கிழமை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

புதிய ஆண்டுக்கான தலைவராக டீ.லோஜனன், செயலாளராக எல். கபிலேஷன், பொருளாளராக எஸ். அனுஷன், அமைப்பாளராக கே.துவாரகன் ஆகியோர் தெரிவாகினர்.

இந் நிகழ்வில் ஜே/145 கிராம சேவகர் கே.சுதர்சன், பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஆர்.நவசக்தியா, ஆனைக்கோட்டை ஸ்ரீநடை இளைஞர் கழக தலைவர் டீ.எப். எக்ஸ்கூரே, கிராம மட்ட தலைவர் கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-9-23)

## ஊடகத் திறன் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஊடகக் கழகம் மற்றும் வடமாகாண கல்வித் திணைக்களம் இணைந்து ஊடக எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு நடத்தப்படுகின்ற வடமாகாண மட்டத்திலான ஊடகத்திறன் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

ஊடகத்திறன் போட்டிக்கு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஊடகக் கழக பொறுப்பாசிரியர் ப.இராஜேஸ்வரன் கேட்டுள்ளார். (அ-2)

## அமைச்சர் விதாரணவுடன் கலந்துரையாடலாம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் அமைச்சருமாகிய பேராசிரியர் திஸ்ஸ விதாரண மாதந்தோறும் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் உள் கட்சி அலுவலகத்திற்கு வருகை தரவுள்ளார்.

குறித்த அலுவலகத்தில் மாதந்தோறும் மக்கள் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதன் பிரகாரம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை முதற்கட்டமாக மக்கள் சந்திப்பு நடைபெறவுள்ளது.

எனவே மக்கள் தமது குறைநிறைகள் பற்றியும் தங்கள் பிரச்சினைகள் பற்றியும் அமைச்சருடன் கலந்துரையாடி அளவளாவ முடியும்.

எனவே கட்சி அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 0771591479, 021 222 9020 தொலைபேசி மூலமாகவோ முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கட்சி அலுவலகம் கேட்டுள்ளது. (அ-2)

## கடலில் மூழ்கி வைத்தியர் பலி

(திருகோணமலை)

நண்பர்களுடன் நீராடச் சென்றவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் திருகோணமலை நிலாவெளியில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை வைத்தியசாலையில் காது, மூக்கு மற்றும் தொண்டை வைத்தியராக கடமையாற்றிவரும் ரொபின்சன் ஜெயரத்தினம் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை நண்பர்களுடன் கடலில் நீராடிக் கொண்டிருந்த வேளை, நீரில் மூழ்கி மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் இவரது உயிர் பிரிந்தது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-2)

## சீனப்பிரஜைகள் இருவர் கைது

(கொழும்பு)

77 இலட்சம் ரூபாயைக் கடத்த முயன்ற சீனப்பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

77 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு பணத்தை தங்களுடைய பயணப்பையில் வைத்து சீனாவுக்கு கடத்துவதற்கு முயன்ற சீனப்பிரஜைகள் இருவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் நீர்வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ் நீண்ட நாட்களாக கடமையாற்றுபவர் என்றும் மற்றையவர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அவருடைய நண்பன் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## வெள்ளி விழா நிகழ்வு

(சாவகச்சேரி)

அருட்சகோதரி அருள் மரியாவின் வெள்ளிவிழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய மண்டபத்தில் பங்கு மக்களால் நடத்தப்படவுள்ளது. இதற்குப் பங்குத் தந்தை யோசப் பிரான்சிஸ் அடிகளார் தலைமை தாங்கவுள்ளார். (அ-9-29)

### இஸ்லாம் ஆன்மிக சிந்தனை

### சொல்வதை செய்; செய்வதை சொல்

உண்மை முஸ்லிம் சொல்வதைச் செய்யவேண்டும். வெறும் உபதேசியாக மட்டும் இருந்து விடக் கூடாது; இது குறித்து திருக்குர் ஆன், நீங்கள் செய்யாதவற்றை கூறுவதை அல்லாஹ்விடம் பெரும் குற்றமாகும்.

(திருக்குர்ஆன் 61:3)

மக்களுக்கு நன்மை செய்யுமாறு ஏவிவிட்டு நீங்கள் உங்களை மறந்து விடுவீர்களா?

(திருக்குர் ஆன் 2:44)

## வெள்ளி நற்சிந்தனை

157

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

சிவன் திருப்பெருந்துறையிலே மணிவாசகருக்குக் குருவடிவாய்க் காட்சி கொடுத்து மறைந்துவிட்டார். இறைவன் திருவுருவம் உடனே அவ்விடத்திலிருந்து மறைந்தமையால் உண்டாகிய மருட்சி மணிவாசகரை உடனடியாகப் பெரிதும் பாதிக்கவில்லை. எனவே அவர் மீண்டும் தனது இயல்பான உலகியல் வாழ்வுக்குத் திரும்பிவிட்டார். சற்றுக் காலங் கடந்த பின்னர்தான் தவறு செய்ததை உணர்கிறார். இறைவனைக் கண்ட போது அவனருள் வயப்பட்ட போது ஏற்பட்ட மனப்பக்குவத்தைப் பின்னர் இழந்து விட்டதற்கான காரணங்களை ஆராய்கிறார்.

மாணிக்கமலையைப் போன்றவனே! நீ காட்சியளித்து மறைந்தனை. அங்ஙனம் நீ மறைந்தபோது நின்புகழை நான் பாடவில்லை. நின்னைப் பணிந்து வணங்கவில்லை. நீ அருள் செய்து மறைந்த பொழுது உண்டாகிய மருட்கை பற்றிய வியப்பினால் எனக்கு அருள் செய்த சிவன் எவ்விடத்துள்ளான் யார் அவனைக் கண்டார்கள் என்று வினவி அலறிக்கொண்டு நான் ஓடவில்லை. ஓடி ஓடித் தேடவுமில்லை. நின் பிரிவினால் கவலை மிகுந்து செயலற்றுக் கிடந்து உள்ளம் உருகவுமில்லை. பயனின்றி நின்று வருந்தினேன் இன்றும் [illegible] உழைக்கவுமில்லை. இதனால் நீ என்னைக் கைவிட்டுவிட்டாயோ என அஞ்சுகிறேன்.

இவ்வாறு மாணிக்கவாசகர் தன்னிலையைப் பாடலிலே கூறும்போது தான் வாழ்ந்த வாழ்வியலை ஒரு மீள்பார்வை செய்திருப்பதை நன்கு உணரமுடிகிறது. பாடுதல், பணிதல், அலறுதல், தேடுதல், ஓடுதல், உருகுதல் என்னும் செயற்பாடுகள் செய்யாமையாலேயே இறைவனுடைய திருவடிப்பேறு கிடைக்கப் பெறாமைக்கான காரணம் என்பதை மணிவாசகர் நன்குணர்ந்துள்ளார். குருந்த மரத்தடியிலே கண்ட இறைவன் எங்குள்ளான் எனத் தேடாதது அவரைச் சற்று யோசிக்க வைத்துள்ளது. மந்திரி என ஒரு பெரிய நிர்வாகப் பதவியிலே இருந்தவர் சிவனைப் பற்றிய தேடலை மேற்கொள்ளவில்லை. தான் முன்னர் பெற்ற அனுபவத்தைப் பெறுவதற்கு எவ்வித முயற்சியுமே மேற்கொள்ளாது உலகியல் வாழ்க்கையிலே திளைத்திருந்துள்ளார்.

இறைவனைப் பிரிந்த பின்னர் ஆற்றாமையால் தனது உடலை நீக்கவுமில்லை. தான் செவ்விய தசை பொருந்திய உடலை நன்கு வளர்ப்பதிலேயே நாட்டம் கொண்டிருந்ததையும் நினைத்துப் பார்க்கிறார். பக்திநிலைக்கு உடல் வளர்ச்சி தடையானது. மணிவாசகரது வாழ்வுச் சூழலும் வளரும் உடலைப்பேண முனைப்பைக் கொண்டிருந்தன. உள்ளம் ஐம்புலன் வழியே சென்று கொண்டிருந்தமையால் இறைவன் திருக்காட்சி மறைந்து விட்டது. அப்பரைப்போன்று உடலை வருத்திக் கோயிற் பணிசெய்யவும் மணிவாசகருடைய பதவிநிலை தடையாயிருந்தது. நின்று உழைத்தனனே என அவர் குறிப்பிடுவது பயனின்றிச் செயற்பட்டதை உணர்த்தி நிற்கிறது. மணி என்று குறிப்பிடுவதன் மூலம் ஆசாரியர்களில் மேலானவராக இறைவனைக் கருதுகிறார். சிவபுராணத்தில் கோகழியாண்ட குருமணி எனக் குறிப்பிட்டுள்ளார். மனதால் இறைவனை நினைக்கும் பக்திநிலையை அவர் அடையவில்லை. மனிதவாழ்வியலில் பிரிவு ஏற்படும்போது அலறுதல், தேடுதல், ஓடுதல், உருகுதல் போன்ற செயற்பாடுகள் நடைபெறும். இதனை இறையியல் வாழ்விலும் மேற்கொள்ள மணிவாசகர் வழிகாட்டுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பாடிற்றிலேன் பணியேன் நீ
யொளித் தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேனை விடுதி கண்டாய்
வியந்தாங் கலறித்
தேடிற்றிலேன் சிவனெவ் விடத்தான்
எவர் கண்டனரென்று
ஓடிற்றிலேன் கிடந்துள்ளுருகேன்
நின்று உழைத்தனனே

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மின்னல் வேக கூடைப்பந்து; ஜொலிஸ்ரார் வி.க. சம்பியன்



கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் நடத்திய மின்னல் வேக கூடைப் பந்தாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

நேற்று முன்தினம் புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெற்ற இப் போட்டியில் யாழ். மாவட்டத்தின் முன்னணி அணிகள பங்குபற்றியிருந்தன.

முன்னதாக இடம்பெற்ற இரு அரையிறுதி ஆட்டங்களில் வென்று ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் மற்றும் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இறுதி போட்டியில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணியை ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வென்றது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றன. இருப்பினும் போட்டியின் இறுதிப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 24:18 என்ற புள்ளிகள் அடிப்படையில், 06 புள்ளி வித்தியாசத்தில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணியை வென்றது.

இறுதிப் போட்டியின் போது சிறந்த விளையாட்டு வீரனும் யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஷண். தயாளன் கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்தார். (க-23)

# பட்டம் விடும் போட்டி; விசித்திர நட்சத்திரக்கூட்டம் முதலிடம்

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



தைத்திருநாளையொட்டி யாழ். வல்வெட்டித்துறை வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையம் நடத்திய பட்டம் விடும் போட்டியில் வலவெட்டித்துறையைச் சேர்ந்த ஜெயதாஸ விஜயதாஸ் என்பவரது விசித்திர நட்சத்திரக்கூட்டம என்ற பட்டம் முதலாம் இடத்தை பெற்றுள்ளது.

இதேவேளை. வல்வெட்டித்துறை குளவிகள் கலாமன்ற இளைஞர்களின் விண்வெளி ஓடம் என்ற பட்டம் இரண்டாம் இடத்தினையும் தட்டிவான் என்ற பட்டம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டி வல்வெட்டித்துறையில் பட்டம் கட்டும் ஆர்வலர்களுக்கு இடையில் பட்டம் விடும் போட்டியை கடந்த செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரைத் திடலில் நடத்தியது.

மேற்படி நிலையத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் இந்த பட்டம் விடும் போட்டி இம்முறை 4 ஆவது தடவையாக நடத்தப்பட்டது.

பட்டம் கட்டும் ஆர்வம் உடையவர்கள் பல விசித்திரமான பட்டங்களைக் கட்டி போட்டிக்கு எடுத்து வந்து அதனை பறக்க விட்டும் காட்டுவார்கள். எந்தப்பட்டம் மிகச் சிறப்பாகவும் நேர்த்தியாகவும், பார்வையாளர்களைக் கவரும் விதமாக இருக்கின்றதோ அதற்கு பரிசு வழங்கப்படும்.




இம்முறை 42 போட்டியாளர்கள் இந்தப் பட்டம் விடும் போட்டியில் பங்குபற்றியிருந்தனர்.

கடற்கன்னி, விமானம், கப்பல், பெட்டி, மனிதன், பாம்பு, கார் நட்சத்திரம், ஹெலிகெப்டர், பராந்து போன்ற பல வடிவங்களில் பட்டங்கள் அமைக்கப்பட்டு ஏற்றப் பட்டிருந்தன.

இப்பட்டப்போட்டிக்கு 4 நடுவர்கள் வல்வெட்டித்துறை வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தினால் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டியில் பட்டம் பறந்த தூரம், பட்டத்தின் வடிவம், திறமை,



ஆக்கம் போன்ற ஒவ்வொன்றுக்கும் 25 வீதம்படி நடுவர்களால் புள்ளிகள் வழங்கப்பட்டன. (க)

# பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்து யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு காற்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தி வரும் காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 2013 ஆம் வருடத்திற்கான போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்து கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளது.

2012 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் காற்பந்தாட்ச் சுற்றுப்போட்டியினை நடத்தியிருந்தது. அந்தப் போட்டியில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனாகியிருந்தது.

அந்த வகையில் இன்று 2013 ஆம் ஆண்டுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும், தவிர்க்க முடியாத காரணத்தினால் 2013 ஆம் ஆண்டே இந்தப்போட்டி நடத்தப்படாமல் இவ்வருடம் (2014) நடத்தப்படுவதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.


இம்முறை போட்டிகளில் யாழ். மாவட்ட பாடசாலைகளிலிருந்து 15 அணிகள் பங்குபற்றவிருப்பதாகவும், அதில் 14 அணிகள் முதல் சுற்றில் மோதவுள்ளதுடன், கடந்த முறை சம்பியனாகிய சென்.பற்றிக்ஸ கல்லூரி அணி "பை" அடிப்படையில் அடுத்த சுற்றிலிருந்து போட்டிகளில் கலந்துகொள்ளும் எனத் தெரிவித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை முதற் சுற்றுப்போட்டிகள் மற்றும் காலிறுதிப் போட்டிகள் இடம்பெறும். தொடர்ந்து எதிர்வரும் திங்கட்கிழமை அரையிறுதிப் போட்டிகள் இடம்பெற்று மறுநாள் செவ்வாய்க்கிழமை இறுதிப போட்டி நடைபெறும் என தலைவர் மேலும் தெரிவித்தார்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆகிய 15 அணிகளே பங்குபற்றவுள்ளன. (க)

# ஆஸி.ஓபன் டெனிஸ்; மரிய ஷரபோவா வெற்றி

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.



உலகின் மூன்றாம் நிலை வீராங்கனையான மரிய ஷரபோவா நேற்று நடந்த இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இத்தாலியை சேர்ந்த கரீன்னாப்பை எதிர் கொண்டார்.

முதல் செட்டை ஷரபோவா 6:3 என்ற கணக்கில் எளிதில் வென்றார். ஆனால், 2ஆவது செட்டை 44ஆவது தரவரிசையில் இருக்கும் கரீன்னாப்பை 6:4 என்ற கணக்கில் கைப்பற்றி ஷரபோவாவுக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

வெற்றி - தோல்வியை நிர்ணயம் செய்யும் மூன்றாவது செட் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இருவரும் மாறிமாறி புள்ளிகளை பெற்றனர். ஒரு கட்டத்தில் ஷரபோவா தோல்வியை சந்திக்கும் நிலையும் உருவானது. அதில் இருந்து மீண்டு ஷரபோவா இந்த செட்டை 10:8 என்ற கணக்கில் போராடி வென்று மூன்றாவது சுற்றுக்கு நுழைந்தார். ஸ்கோர் 6:3. 4:6. 10:8.

ஷரபோவா மூன்றாவது சுற்றில் பிரான்சை சேர்ந்த 25ஆம் நிலை வீராங்கனையான கோர்னெட்டை எதிர் கொள்கிறார். கோர்டை 2ஆவது சுற்றில் 6:3. 4:6. 6:4 என்ற கணக்கில் இத்தாலியை சேர்ந்த கேமிலாவை தோற்கடித்தார்.

மற்ற ஆட்டங்களில் கார்லா (ஸ்பெயின்), சிபுல் கோவா (சுலோவீர்க்கியா), அனஸ்டசியா (ரஷ்யா), கேர்பின் (ஸ்பெயின்) ஆகியோர் வென்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

உலகின் 16ஆம் நிலை வீரரான நிஷிகோரி (ஜப்பான்) 6:1. 6:1. 7:6. (7:3) என்ற நேர்செட் கணக்கில் செர்பியா வீரர் டுகனை தோற்கடித்து மூன்றாவது சுற்றுக்கு நுழைந்தார். (க)



# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி; மட்டுவில் ஐங்கரன் சம்பியன்



கிறிஸ்மஸ் பண்டிகையினைக் கொண்டாடும் முகமாக சாவகச்சேரி லிகோரியார் விளையாட்டுக் கழகத்தினரால் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்பட்டது. இப் போட்டிகளில் தென்மராட்சியச் சேர்ந்த 15 அணிகள் பங்குபற்றியிருந்தது. நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றிக்கிண்ணத்தினை மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் வெற்றி கொண்டது.

இக் கரப்பந்தாட்ட போட்டிகளின் இறுதிச்சுற்றுப்போட்டி சாவகச்சேரி லிகோரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பொங்கல் தினமன்று நடைபெற்றது.

இப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகமும் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகமும் மோதின.

5 செட்களைக் கொண்ட இப் போட்டியில் 3 செட்களைக் கைப்பற்றி மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

போட்டியின் சிறந்த வீரனாக மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தின் எஸ்.சதீஸ், தொடர் ஆட்ட நாயகனாக மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தின் எஸ்.வினோ ஆகியோர் தெரிவானார்கள்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக புனித லிகோரியார் ஆலய பங்குத்தந்தை யோசப் பிரான்சிஸ், சாவகச்சேரி நகர பிதா தேவசகாயம்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கி கௌரவித்தனர். (க-23-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் முடிந்த பின்னரும் கூட...

சேவகர்களே அன்றி மக்களை ஆட்சி செய்ய வந்தவர்கள் அல்ல. முதலில் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் ஆண்டான் அடிமை போன்ற ஒரு உறவு அரச அலுவலர்களுக்கும், மக்களுக்கும் இடையில் இருந்து வந்தது. சுதந்திரம் கிடைத்த பின்னர் கூட அப்பேர்ப்பட்ட ஒரு உறவையே நாங்கள் தொடர்ந்து பாதுகாத்து வந்திருந்தோம்.

இது தவறு என்று நாங்கள் அப்போது நினைக்கவில்லை. பின்னர் இயக்கங்கள் இட்ட கட்டளைகளை நிறைவேற்றும் போதும் மேலிருந்து கீழ் நோக்கி இடப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாகவே நாங்கள் தொடர்ந்து கடமையாற்றி வந்துள்ளோம். போர் முடிந்த பின் கூட மறுபடியும் ஒரு ஆண்டான் - அடிமை உறவு முறை தொடர்ந்து வந்துள்ளதை நான் இந்த மூன்று மாதங்களுள் அவதானித்துள்ளேன்.' அதிகாரத்திற்கு அண்மைத்தானவர்கள் தாங்கள் இட்டதே சட்டம் என்ற அடிப்படையில்தான் நிர்வாகம் நடந்து வந்துள்ளது என்று காண்கின்றேன்.இதில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

ஆகவே அவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய நான் முன் வரவேண்டும். என்னுடன் எனக்கு அனுசரணையாக நீங்கள் யாவரும் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். மற்றைய மாகாணசபைகளில் என்ன விதத்தில் நிர்வாகம் நடக்கின்றதோ நான் அறியேன். ஆனால் நான் இந்தத் தலைமைப் பொறுப்பில் இருக்கும் வரையில் நாங்கள் ஒரே நேரத்தில் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகவும், மக்கள் காவலர்களாகவும், மக்கள் சேவகர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

பலவிதமான பிரச்சினைகளை எமது மக்கள் எதிர்நோக்கியுள்ளார்கள். எமது அரசியல் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. போரின் பின்னரான எமது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. இவை சம்பந்தமாகவும் பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்கியுள்ளோம். அப்பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்ள முடியாத ஒரு நிலையில்தான் ஜனாதிபதியை அணுகி அதற்கான தீர்வுகளைப் பெற நான் முயற்சித்து ஓரளவு முன்னேற்றமும் கண்டுள்ளேன்.

இந்நிலையில் எமது நிர்வாக அலகைச் சீருடன் செம்மையாகச், சிறப்பாகக் கொண்டு நடத்த உங்கள் ஒவ்வொருவரதும் உதவியையும், அனுசரணையையும் நாடி நிற்கின்றேன். வேலை தெரியாதிருப்பது ஒரு குற்றமில்லை. ஆனால் அதற்குரிய அறிவைப் பெற எத்தனிக்காது தொடர்வது ஒரு குற்றத்திற்கு ஒப்பானது.

எனவே எமது மக்களின் ஆணையை நிறைவேற்ற, எமது தேர்தல் அறிக்கைகளில் நாங்கள் மக்களுக்கு எடுத்துரைத்த எமது நோக்குகளை முன்னெடுத்துச் செல்ல உங்கள் யாவரதும் ஒத்துழைப்பை நான் நாடுகின்றேன்.

போரின் பின்னர் கல்வி, சுகாதாரம், வேளாண்மை, மீன்பிடி, வணிகம், வியாபாரம், கூட்டுறவு, காணி போன்ற பலவற்றிலும் மக்களின் எதிர்பார்ப்புக்களை நாங்கள் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதை எவ்வாறு செய்யப் போகின்றோம் என்பது முக்கியமான கேள்வி. நல்லாட்சி செய்ய விழைவதே நாம் நாடக்கூடிய முக்கியமான ஒரு எதிர்பார்ப்பு. நல்லாட்சி என்று கூறும் போது அங்கு பொறுப்புக் கூறல் அவசியமாகின்றது. வெளிப்படைத்தன்மை இன்றியமையாததாகின்றது. எமது நலன்களில் முரண்பாட்டுத் தன்மை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகின்றது. அதாவது எமது சுயநலத்திற்காக எமது பதவிகளை நாம் உபயோகிக்க முற்படுவோமாகில் அங்கு எமது சுயநலத்திற்கும், பொதுநலத்திற்கும் இடையில் முரண்பாடு ஏற்படுகின்றது. இப்பேர்ப்பட்ட முரண்பாடு தவிர்க்கப்பட வேண்டும். மேலும் நாம் ஒருங்கிணைந்து பொறுப்புக் கூற முன்வர வேண்டும். ஒருவர் மேல் இன்னொருவர் பழியைப் போட்டுத் தப்பிக்கப் பார்க்காமல் எமது பொறுப்பு கூட்டான பொறுப்பு என்பதை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும். எந்நேரத்திலும் நேர்மையும், நம்பகத்தன்மையும், பாரபட்சமின்மையும் எமது நடவடிக்கைகளில் புலப்பட வேண்டும்.

இதை நான் ஏன் கூறுகின்றேன் என்றால் மக்கள் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் எம்மிடம் பலதையும் எதிர்பார்க்கின்றார்கள். சென்ற மூன்று மாதங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், சிறைக்குச் சென்று வந்த மக்கள், போரினால் பலதையும் இழந்த மக்கள், பரிதாபகரமான நிலையில் உழலும் மக்கள் என்று பலரும் என்னிடம் வந்து தமது குறைகளைக் கூறினார்கள். அவர்கள் குறைகளுக்குத் தீர்வு காண்பது என்றால் நாங்கள் கூட்டாக உழைத்து அவர்களுக்குத் தீர்வுகளைப் பெற உதவி செய்ய வேண்டும். அதற்கு நாங்கள் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. இதுவரை காலமும் நாம் எப்படி வாழ்ந்து வந்தோம் என்பது அவசியமில்லை. ஆனால் இனி எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றோம் என்பது முக்கியம்.

பொதுமக்கள் சார்பான பதவிகள் அனைத்தும் எம்மேல் சுமத்தப்பட்ட. அல்லது திணிக்கப்பட்ட ஒரு நம்பிக்கைப் பொறுப்பு என்பதே எனது கருத்து. மக்களின் நலன் நாடி நடந்து கொள்வதே நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் கடமை. எனவே மக்களின் அவலங்களை, தேவைகளை, குறைகளை, எதிர்பார்ப்புக்களை எவ்வாறு தீர்க்கலாம் என்பதில் எமக்கு புதிய புதிய உத்திகளும், பொறிமுறைகளும் உதிக்க வேண்டும். சட்டத்தின் உக்கிரத்தைத் தணித்துக் கூட எவ்வாறு மக்கள் நலன்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் கரிசனை எடுக்க வேண்டும். அதைச் செய்ய முடியாது, இதைச் செய்ய முடியாது, சட்டத்தில் இடமில்லை என்று இலேசாகக் கூறி வாழாதிருக்காது மக்களுக்குத் தேவையான ஆனால் சட்டப்படி எதிர்பார்க்கக்கூடிய நலஉரித்துக்களைப் பெற்றுக் கொடுக்க நாங்கள் முன்வர வேண்டும்.

எமது தமிழ் மக்கள் பிறநாடுகளில் போய் எவ்வளவு சிறப்பாக வாழ்கின்றார்கள் என்பதை மறக்காதீர்கள். அதே மக்கள் தானே நாங்களும். எமக்கு ஏன் எம்மை முன்னேற்றி இந்த நாட்டினுள் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது? முயன்றால் முடியும் என்பதே என் முடிவு.

முதன்முதலாக எமது மக்கள் எம்மை ஏகோபித்த விதத்தில் பதவியில் ஏற்றியுள்ளார்கள். நாம் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டியவை பலவுண்டு. எமது சூழல், சுற்றாடல், பிரதேசம், மாகாணம் என்று பலவிதங்களில் அவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம். அதற்கு அலுவலர்களாகிய நீங்கள் அனுசரணைகளாக இருக்க வேண்டும். முட்டுக்கட்டைகளாக இருக்கக் கூடாது. எமது மக்கள் பலவிதங்களில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். உள்ளத்தால், உடலால், அறிவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் வாழ்க்கையை நாங்கள் தான் நல்ல நிலைக்குக் கொண்டு வர உதவ வேண்டும். எந்த நேரமும் அந்த மக்களின் முன்னேற்றமே எமது கரிசனையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். மக்களை நீங்கள் உதாசீனப்படுத்த எத்தனிப்பீர்கள். ஆனால் அது உங்களை நீங்களே உதாசீனப்படுத்துவதற்கு சமனாகும்.

மிக முக்கியமாகப் போரானது பெண்களையே மிகவும் பாதித்துள்ளது. அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டு வர, அவர்கள் தம் மீது மதிப்பைப் பெற, தன்னம்பிக்கை பெற, தமது வாழ்க்கைகளைச் செவ்வனே எடுத்துச் செல்ல நாங்கள் எம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய முன்வர வேண்டும். ஆகவே அவர்கள் மீது கோபத்தையும், வெறுப்பையுங் காட்டாது மதிப்பையும், மரியாதையையும், மனிதத்தன்மையையும் காட்ட நாங்கள் பழகிக் கொள்ள வேண்டும். பெண்களைக் கேவலமாக நடத்த முற்படும் அலுவலர்களை என்னால் மன்னிக்க முடியாது என்பதை இப்பொழுதே கூறி வைக்கின்றேன்.

பெண்கள் தான் எங்கள் இனத்தின் கண்கள். அவர்களைத்தான் அவர்களின் சுற்றாடல்களில் கூடாரம் இட்டிருக்கும் புதிய சூழல் கொடூரமாக நடத்த முற்பட்டுள்ளது. பெண்களுக்குப் போதிய பாதுகாப்பையும், கல்வியையும் அளிப்பது எமது தலையாய கடன். ஒரு ஆணின கல்வி அவனுக்கே பயன்படுகின்றது. ஒரு பெண்ணின் கல்வி ஒரு குடும்பத்துக்கே உதவுகின்றது என்பதை நாங்கள் மறக்கக் கூடாது.

ஆகவே இன்றிலிருந்து எமது கடமைகளை நாங்கள் சீருஞ் சிறப்புமாக நடாத்திச் செல்ல முடிவெடுப்போமாக! தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற கூற்றுக்கு ஒப்ப புதியதொரு யுகம் நோக்கிப் பயணிக்க உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கின்றேன். எது வேண்டுமானாலும் என்னுடன் வந்து பேசித் தீர்வு காணலாம். போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் உடன் பிறப்புக்களின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுதத நாங்கள் சேர்ந்து உழைப்போமாக!

சட்டம் எமக்குப் பல கடப்பாடுகளை விதித்து எமது அதிகாரங்களையும் முடக்கி இருக்கின்றது என்பது எனக்குத் தெரியாத ஒன்றல்ல. ஆனால் அதற்கூடாகச் சுழியோடி மக்கள் நலன்களை எவ்வாறு பெற்றுக் கொடுப்பது என்பது சம்பந்தமாக எனக்கு அறிவுரை வழங்குவது உங்கள் பொறுப்பு என்பதை மறக்காதீர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-6-11)

## சர்ச்சைக்குள்ளான பரீட்சை...

கள் திணைக்களம் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

தற்போதைய பரீட்சை முறையில் உள்ள நெருக்கடி நிலைமை காரணமாக பெற்றோர் எதிர் நோக்கும் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு பரீட்சைகள் சரளமாக்கப்படவுள்ளன.

கடந்த 3 ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இதுபற்றி கவனம் செலுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## முதலமைச்சருக்கான...

எதிர்வரும் காலங்களில் வட மாகாணத்தில் முன்னெடுக்கப் படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் அவற்றில் அரச அதிகாரிகளின் பங்களிப்புகள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது.

இந் நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், ஆளுனரின் செயலாளர் இளங்கோவன் மற்றும் மாகாண அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (செ-6)

## போர்க்குற்ற சாட்சியங்களை..

நாம் அந்தச் சந்திப்புகளை வகைப்படுத்துவதில்லை. தூதுவர் ஸ்ரீபன் ராப்பின் அறிக்கை அவரது சார்பிலானது.


இலங்கைபோரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மோசமான மனிதஉரிமை மீறல்கள் மற்றும் அனைத்துலக மனிதாபிமான சட்டமீறல்கள் குறித்த சாட்சியங்களை நேரில் சந்தித்து விபரங்களை பெறும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

அந்த விபரங்களை நாம் பகிர்ந்து கொள்வதால் சாட்சிகளுக்கு ஆபத்து ஏற்படுத்தப்பட கூடும்.

எனவே, சுதந்திரமான நம்பகரமான விசாரணைகளின் மூலம் இலங்கை அரசாங்கம் உண்மையை கண்டுபிடித்து சம்பந்தப் பட்டவர்களை தண்டிக்கவேண்டுமஎன்று யூலியானா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவுக்கு தகவல் தெரிவித்தவர்களின் அடிப்படையில், அமெரிக்கா சாட்சிகளிடம் தகவல் திரட்டியதா என்று யூலியானாவிடம கேள்வி எழுப்பியதற்கு, அவ்வாறு தம்மால் வகைப்படுத்திக் கூறமுடியாது என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## பாக்- இலங்கை போராட்டம்



ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுபயணம் மேற்கொண்டு பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ற் தொடரில் பங்குபற்றிவரும் இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் இரு அணிகளும் போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளன. ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நேற்றைய நாள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (க)

## ராஜீவை தாக்கிய...

துப்பாக்கியை திருப்பி பிடித்து ராஜீவ்காந்தியின் தோள்பட்டையில் அடித்தார். இது 1987-ம் ஆண்டு ஜூலை 30-ம் திகதி நடந்தது.

ராஜீவ் காந்தியை தாக்கிய கடற்படை வீரர் விஜித் ரோகண விஜயமுனி கைது செய்யப்பட்டு இராணுவ கோர்ட்டில் ஆஜர்படுத் தப்பட்டார்.

அவர் மீது ஒரு நாட்டின் பிரதமரை கொலை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டது. விஜயமுனிக்காக வாதாடிய வக்கீல் கூறுகையில்,

அவர் கொலை முயற்சியில் ஈடுபடவில்லை. அந்த எண்ணம் இருந்திருந்தால் துப்பாக்கியில் இருந்த கத்தியால் குத்தி இருக்கலாம் என்றார்.

இதையடுத்து அவருக்கு சில வருடங்கள் மட்டுமே ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது.

ராஜீவை தாக்கியதால் அவர் சிங்களவர்கள் மத்தியில் ஹீரோவாக புகழப்பட்டார். ஜெயிலில் கூட இராஜ வாழ்க்கை வாழ்ந்து வந்தார் எனக் கூறப்படுகிறது.

ஜெயிலில் இருந்து விடுதலையான விஜயமுனி பட்டப் படிப்பை முடித்து சுயதொழில் ஆரம்பித்து அரசியலில் ஈடுபட்டார். சிங்கள உரிமைய கட்சியில் இணைந்து 2000-ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டார்.

தற்போது இவர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்துள்ளார்.

1987-ல் சந்தேகத்தின் பேரில் கைதான தமிழ் அரசியல் கைதிகள் பலர் இன்னும் ஜெயிலில் இருக்கிறார்கள். ஆனால் ஒரு நாட்டின் பிரதமரை தாக்கிய விஜயமுனி சுதந்திரமாக வெளியே நடமாடுகின்றமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது. (செ-11)

## நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலத்தின் நூற்றாண்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை நிகழ்வு அதிபர் ந. கலைநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக மாகாண சபை ஆளுநர் செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாணசபை விளையாட்டுத்துறை பண்பாட்டு அலுவலர் செயலாளர் சி. சத்தியசீலன், வட மாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா, தீவகக் கல்விப் பணிப்பாளர்தி.ஜோன்குயின்ரஸ், வேலணைப் பிரதேச சபைத்தவிசாளர் சி. சிவராசா, ஸ்தாபகரின் புதல்வன் வைத்திய கலாநிதி வி. கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் பேராசிரியர் கா. குருபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் எஸ். சிவலிங்கராசா, வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீபன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொ. சிவானந்தராசா, முன்னாள் ஆசிரியை திருமதி மீனாட்சி சிங்கராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மகிந்த,விக்கி பங்...

பதியால்திறந்து வைக்கப்படவுள்ளது.

இதேவேளைஇந்த வைத்தியசாலை திறப்புவிழாவுக்கு வடக்குமாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடந்த வருடம் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம் பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில்இரண்டுபெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைத்தது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்வடக்கின் முதலாவது முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கும் பின்பு முதன்முறையாக யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் வருகை தரவுள்ளார்.

வடக்கில் இடம் பெறும் பொது நிகழ்வில் ஜனாதிபதியும வடக்கு முதலமைச்சரும் முதன்முறையாக பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளைஇந்த நிகழ்வல் மத்திய சுகாதார அமைச்சர் உட்பட பல அமைச்ச்ர்களும வடக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சர் உட்பட ஏனைய அமைச்சர்களும்வடக்குமாகாண சபையின் உறுப்பினர்களும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கு பற்றவுள்ளனா என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (செ-6)

## மன்னார் மனித...

தாக 4 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. முதலில் மண்டையோடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. பின் அதன் ஏனைய பாகங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ள எலும புக்கூடுகளில் ஒரு மண்டையோட்டின் வாய் முழுமையாக திறந்திருந்தமையினை காணக் கூடியதாக இருந்தது.

குறித்த மண்டையோட்டின் வாய்ப்பகுதியில் காயம் ஏற்பட்டுள்ள அடையாளங்களும் காணப்படுகின்றமையினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளைநேற்று வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணி வரை புதைகுழி தோண்டும் பணி இடம்பெற்றது. மீண்டும் இன்று வெள்ளிக் கிழமை புதைகுழி தோண்டும் பணி இடம்பெறவுள்ளது.

தொடர்ந்துதோண்டப்படும் இம் மனிதப் புதைகுழியிலிருந்து மனித எச்சங்கள் அதிகளவில் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதானது வடக்கு மக்கள் மத்தியில் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


### வீடு விற்பனைக்குண்டு

ஸ்ரான்லி வீதி, 49/4-ம் இலக்கத்திலுள்ள ஒரு பரப்புக் காணியில் அமைந்த விசாலமான வீடு உடனடியாக விற்பனைக்குண்டு.

+ தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:-
0777285794 (4949)

### பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் பல கிளைகளை விஸ்தரிக்கும் Innovage International Company அதன் அடுத்த கிளையாக நெல்லியடியில் ஆரம்பிக்க உள்ள புதிய கிளைக்கு பதவி வெற்றிடங்கள் உள்ளன. முந்தும் 20 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Qualification:-O/L (அனுபவம் அவசியமற்றது)

குறிப்பு:- தங்கும் இடவசதி இலவசம்

0776219536, 0758510642 (4945)

### விசேட விலைக்கழிவில்

### வாகன விற்பனை

வேணுஜா கார் சேல்ஸ் நிறுவனத்தின் மூன்று வருட பூர்த்தியினையும் புது வருடத்தினையும் முன்னிட்டு சகல வாகனங்களும் 20% விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்படவுள்ளது



- உங்களிடமுள்ள பாவித்த மற்றும் பாவித்து தற்போது பாவிக்க முடியாத நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், கார்கள் மற்றும் ஏனைய சகல வகை வாகனங்களை பெறுமதிக்குரிய விலையில் எம்மிடம் ஒப்படைத்து உங்களுக்கு விருப்பமான வாகனங்களை குறைந்த விலையில் மாற்றிப் பெற்றுக்கொள்ள முடியும்.
- உங்களிடமுள்ள வாகனங்களை நியாயமான விலையில் விற்றுத்தரப்படும்.
- 17.01.2014 தொடக்கம் 25.01.2014 வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்படும் சகல வாகனங்களுக்கும் விசேட விலைக்கழிவு (20%) வழங்கப்படும்.
- எம்மிடம் கொள்வனவு செய்யப்படும் வாகனங்களுக்கு தேவையேற்படில் லீசிங் வசதி செய்து தரப்படும்.
- காலை 9.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

தொலைபேசி இல.
021 568 1975
077 844 8310, 0777 280 119 (4950)

முகவரி : கு.சர்வா
'வேணுஜா வாகனவிற்பனை நிலையம்',
கண்டிவீதி, சாவகச்சேரி.

2 மணித்தியாலத்தில்

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737

GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.

இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service 2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Computer Repair Laptop and motherboard Repair

### மணல் விற்பனைக்கு

கட்டட வேல்லைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.

4 1/2 ரக்ரர் 18500/= (C-6246)

தொடர்பு: கண்ணா-0777590792

இதோ இன்று முதல் நாம் புது முகவரியில்

FALC FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH

### FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சான்றிதழ்களை France, Canada, Belgium, Swiss செல்வோர் மற்றும் வெளிநாட்டில் படிக்க விரும்புவோர், வேலை செய்யவுள்ளோர் வடக்கில் எம்மிடம் மட்டுமே Easy way இல் French கற்றுக் கொள்ள முடியும்.

ஏன் எம்மிடம் அதிகமானோர் French கற்கிறார்கள்?

Speaking, Listening, Reading & Writing இல் தனி தனி கவனம்....
Teaching materials அனைத்துமே France இல் இருந்து பெறப்பட்டது...
சர்வதேச தரத்தில் French வகுப்புக்களை வழங்குதல்..
ஒரு வகுப்பிற்கு 10 பேரை அனுமதித்து தனிப்பட்ட கவனம் செலுத்தல்..
எம்மிடம் கற்றோர் France மற்றும் Canada இல் வேலை செய்கிறார்கள்... (C-6241)

ஆசிரியர்: MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொள்பவரும், 2006 ஆம் ஆண்டிலிந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஆசிரியர்...)

750 க்கும் மேற்பட்டோர் French கற்று சென்றுள்ளனர்

கடந்த சர்வதேச DELF French பரீட்சையில் வட மாகாணத்தில் எமது மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்தனர்.....

புதிய பிரிவு ஆரம்பம் நாளை 8am..
N0. 40, Palaly Road, Jaffna.
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில்)

TP: 0779 789 456/
021 320 2973





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org